janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 பிப்ரவரி 27 - மார்ச் 05 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 47




**அரசியல் வெற்றி**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற்று வாக்கு எண்ணிக்கை (22.02.2022) முடிவுகள் வெளியாகியுள்ளன. வெற்றி, தோல்விகள் அன்று மாலை தான் முழுமையாக தெரியவரும் நிலையில், >>>



ப 02

**பாசிச மதவெறி**


இன்றைய தினம் நாடு எதிர்கொண்டிருக்கும் பாசிச மதவெறி அரசியல் என்பது மிக மிக ஆபத்தானது. பாம்பின் விஷத்தை விட பன்மடங்கு கொடியது. ஆர்.எஸ்.எஸ்... அதன் அரசியல் அங்கமான பி.ஜே.பி. >>>



ப 08

**கார்ப்பரேட் ஊழல்கள்**

இன்றைய தினம் நாடு எதிர்கொண்டிருக்கும் பாசிச மதவெறி அரசியல் என்பது மிக மிக ஆபத்தானது. பாம்பின் விஷத்தை விட பன்மடங்கு கொடியது. ஆர்.எஸ்.எஸ்... அதன் அரசியல் அங்கமான பி.ஜே.பி. இப்போது கையில் எடுத்திருக்கிற ஆபத்தான, >>>



ப 03

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்ற இடங்கள்**



| | |
|---|---|
| மாநகராட்சி வார்டுகள் | 13 |
| நகராட்சி வார்டுகள் | 19 |
| பேரூராட்சி வார்டுகள் | 26 |

# திமுக கூட்டணி மாபெரும் வெற்றி

## மக்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை எப்போதும் காப்பாற்றுவோம்

### மு.க.ஸ்டாலின் பேட்டி

சென்னை, பிப். 23 ``கடந்த 9 மாத கால ஆட்சிக்குக் கிடைத்த நற்சான்றுதான் இந்த மகத்தானவெற்றி, மக்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை எப்போதும் காப்பாற்றுவோம்'' என்று நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வெற்றி குறித்து முதலமைச்சரும் தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலின் பிப்.22 அன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.

நடந்து முடிந்திருக்கும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கிறது. இந்த வெற்றியை வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எனது வேண்டுகோளை ஏற்று மக்கள் தந்த முழு வெற்றி!**

இந்தத் தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டு மக்களிடத்தில் நான் ஒரே ஒரு வேண்டுகோள்தான் வைத்தேன். எங்கள் கூட்டணிக்கு முழுவெற்றியைத் தாருங்கள், அப்படித் தருகிறநேரத்தில், அதைப் பயன்படுத்தி உங்களுக்குப் பணியாற்ற, தொண்டாற்ற நாங்கள் காத்திருக்கிறோம். அந்த முழு வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்கு நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வழங்கியிருக்கிறார்கள்.

கடந்த 9 மாத கால ஆட்சிக்கு மக்கள் வழங்கியிருக்கக்கூடிய

தொடர்ச்சி 8ம் பக்கம் >>

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி**

| மொத்த இடங்கள் | வெற்றி பெற்ற இடங்கள் |
|---|---|
| 21 மாநகராட்சிகள் | 21 மாநகராட்சிகள் |
| 138 நகராட்சிகள் | 134 நகராட்சிகள் |
| 489 பேரூராட்சிகள் | 437 பேரூராட்சிகள் |



**எதிரும் புதிரும்**

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் கோவையில் பாஜக ஒரு இடம்கூட வெற்றிபெறவில்லை என்றால் எனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வேன்

– வானதி சீனிவாசன்



சொன்னதை செய்வாரா வானதி






# அரசியல் வெற்றி

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற்று வாக்கு எண்ணிக்கை (22.02.2022) முடிவுகள் வெளியாகியுள்ளன.**

வெற்றி, தோல்விகள் அன்று மாலை தான் முழுமையாக தெரியவரும் நிலையில், பகல் 12 மணியளவில் கிடைத்த வெற்றிகள் குறித்தே குறிப்பிடமுடியும்.

முழு விவரங்கள் அனைத்தும் அடுத்த வார ஜனசக்தியில் வெளியிடப்படும்.

நடைபெற்ற தேர்தலில் நகர்ப்புற வாக்காளப் பெரு மக்கள் தங்களின் ஜனநாயகக் கடமையை முழு அளவில் நிறைவேற்ற முன்வராதது ஏன் என்கிற கேள்வி எழுகின்றது. குறிப்பாக 200 வார்டுகளைக் கொண்ட சென்னை பெருநகரத்தில், 43.59% வாக்காளர்களே வாக்களித்துள்ளனர்.

நகர்ப்புற அமைப்புகளில் பேரூராட்சி பகுதிகளில் 74.68 சதவிகிதமும், நகராட்சிகளில் 68.22 சதவிகி தமும், மாநகராட்சிகளில் 52.22 சதவிகிதமும் மொத்தத் தில் நகர்ப்புற அமைப்புகளில் 60.70 சதவிகிதம் வாக்களித் துள்ளனர்.

மாநகராட்சிகளில் கரூர் மாநகராட்சியில் 75.84 சதவிகித மக்கள் வாக்களித்துள்ளது குறிப்பிடத்தக்கது. மற்ற மாநகர் பகுதிகளில் குறைவாகவே வாக்களித்துள்ளனர்.

மாநகரங்களில் அதிகபட்சம் கரூர் மாநகரமும், மிகக் குறைந்த பட்சம் சென்னை மாநகரமும் வாக்களித் துள்ளனர்.

பொதுவாக நகர்ப்புற மக்கள் மிகுந்த விழிப்புணர்வு உள்ள பகுதி என்று குறிப்பிடுவது உண்டு!

அவ்வாறு கூறப்படுகின்ற நகர்ப்புற அமைப்புகளில் உள்ள வாக்காளப் பெருமக்கள் வாக்களிக்க முன்வரவில்லை; வாக்களித்தவர்களும் பெரும்பகுதியினர் ஏழை, எளிய உழைப்பாளி மக்களே அதிகம் என கூறப்படுகின்றது.

இத் தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி நிலைபெற்று ஒன்று பட்டு களம் கண்டது அரசியல்ரீதியாக மிகச் சரியே!

மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், உடன்பாடுகள் மாநிலம் முழுவதும் ஒரே சீராக இல்லை.

மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றது.

உடன்பாடு கண்ட இடங்களிலும் ஒரு சில வார்டு களில் கூட்டணி கட்சியைச் சேர்ந்த நண்பர்களே சுயேச் சையாக போட்டியிட்டனர். இவை போன்ற சிறு, சிறு பிரச்சனைகள் ஆங்காங்கே இருந்தன என்ற போதும் மாநில அளவில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தொடர்வதும், பலப்படுவதும் இன்றைய அரசியல் தேவையாகும்.

வகுப்புவாத சக்திகள் அவர்களுக்கு துணை போகக் கூடியவர்கள் வளர்வது நல்லதல்ல என்பதை நாம் மட்டு மல்ல, மதச்சார்பின்மை கொள்கையில் நம்பிக்கை உடையோர் அனைவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

எண்ணிக்கை என்பது முக்கியம்தான், ஆனால் அத னைக் காட்டிலும் அரசியல் முக்கியம் என்பதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொடர்ந்து நிலைப்பாடாகும்.

அரசியலை கைவிட்டு விட்டு எண்ணிக்கையை முதன் மைப்படுத்திக் கொள்வது தற்காலிகமாகப் பயனளிக்கக் கூடும்.

தற்காலிகம் என்பதனைக் காட்டிலும் தொலைநோக்குப் பார்வையுடன் அரசியல் முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதுவே நாட்டின் எதிர்காலத்திற்கு ஏற்புடையது.

வகுப்புவாதம் தலைதூக்குவதன் மூலம் நாட்டை ஒரு தலைப்பட்சமாக இட்டுச்செல்லும். அது சர்வாதிகாரமாக, பாசிசமாக மாறும் பெரும் பேரபாயத்தை ஏற்படுத்தும்.

ஜெர்மனியில் பாசிச ஹிட்லர் மேற்கொண்ட அரசியல், உலகை இரண்டாம் உலகப் போருக்கு இட்டுச் சென்றது.

அதன் விளைவும், அதனால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதும், பல்லாயிரக்கணக்கான மக்கள் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டதையும் உலகம் அவ்வளவு எளிதில் கடந்து சென்றுவிட முடியாது.

**நமது நாட்டு அரசியல் போக்குகள் ஹிட்லர் பாணி அரசியலை ஒன்றியத்தில் ஆளும் மோடி அரசு கூச்சநாச்ச மின்றி பின்பற்றி வருகின்றது.**

**இத்தகைய விபரீதமான அரசியலை பின்னுக்குத் தள்ள வேண்டிய பெரும் அரசியல் கடமையை நிறைவேற்றிட வேண்டிய கடமை நம்முன் உள்ளது.**

**நமது முன் உள்ள அரசியல் கடமையை நிறைவேற்றுவதன் மூலமாகவே நாட்டை நல்வழிப் பாதையில் இட்டுச் செல்ல முடியும். அதற்கான கட்டமைப்பை உருவாக்க நாம் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.**

நகர்ப்புற தேர்தல் முழுமையான வெற்றிகள் குறித்து குறிப்பிட இக்கடிதத்தில் வாய்ப்பில்லை.

முழுமையான விவரங்கள் குறித்து நமது கட்சியின் மாநில நிர்வாக குழு வரும் 24.02.2022–ல் நடைபெறவுள்ள கூட்டத்தில் பரிசீலனை செய்வோம்.

ஆனாலும் ஒரு வெற்றிச் செய்தி குறித்து நாம் பகிர்ந்து கொள்வது நல்லது என்று கருதுகின்றோம்.

குமரி மாவட்டத்தில் நமது மாவட்ட கட்சி தோழமை கட்சி யுடன் இணக்கமாக பேசி சுமூக தீர்வு காண மேற்கொண்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

நமது கட்சி போட்டியிட விரும்பும் வார்டுகள் குறித்து கேட்டார்கள், பட்டியல் கொடுக்கப்பட்டது. அழைக்கும்போது வாருங்கள் என்றார்கள். அழைப்புக்காக நமது மாவட்ட கட்சி காத்திருந்தது. காத்திருப்பு கடைசி வரை காத்திருப்பாகவே முடிந்தது.

நமது கட்சியை ஒரு பொருட்டாகவே அம்மாவட்டத்தில் உள்ள தோழமை கட்சியினர் கருதவில்லை.

இந்நிலையில் எவர் உதவியும் இல்லை என்று சோர்ந்து போகவில்லை. வாய்ப்புள்ள இடங்களில் போட்டியிட முடிவு செய்து மாநில கட்சி அனுமதியுடன் சில வார்டுகளில் போட்டியிட்டனர். கதிர் அரிவாள் சின்னமும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அவ்வாறு போட்டியிட்டவர்களில் நமது பேராசான் ஜீவாவின் மண்ணான பூதப்பாண்டி பேரூராட்சியில் 8வது வார்டில் போட்டியிட்ட தோழர் அனில்குமார் வெற்றி பெற்றுள்ளார்.

அதனை போன்று வெள்ளிமலை பேரூராட்சியில் 2 வது வார்டில் போட்டியிட்ட தோழர் சுதா வெற்றி வாகை சூடியுள்ளார்.

குமரிமாவட்ட குழுவிற்கும், வெற்றி பெற்ற தோழர் களுக்கும் பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்.

மற்ற விவரங்களை அடுத்த வாரம் பார்ப்போம்.

மொத்தத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி பெற்றுள்ளது.

வெற்றிக்கு வழிவகுத்த வாக்காளப் பெருமக்களுக்கு வாழ்த்துகள்.

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**



த.லெனின்

## பாசிச பா.ஜ.க ஆட்சியில் பெருக்கெடுத்துப் பாயும்

# கார்ப்பரேட் ஊழல்கள்



**வேலியே பயிரை மேய்ந்த கதையாக சமீபத்தில் வெளிவந்துள்ள தேசிய பங்குச் சந்தை ஊழலின் நவீன முகமாக மாறியுள்ள மேனாள் பங்குச் சந்தை தலைவர் சித்ரா ராமகிருஷ்ணா மற்றும் அவரது இல்லங்கள் கட்டிடங்கள் அனைத்தும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பங்குச் சந்தை ஒழுங்காற்று அமைப்பான செபியால் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.**

இமயமலையைச் சார்ந்த பெயர் குறிப்பிடப்படாத யோகி என்பவருடன் சித்ரா ராமகிருஷ்ணா கடந்த 2017 பிப்ரவரி மாதத்திலிருந்தே தகவல் தொடர்பில் இருந்ததும், பங்குச் சந்தை குறித்த பல ரகசிய செய்திகளைப் பத்தி பத்தியாக அவருக்கு அனுப்பியதும், அந்த யோகி இவருக்கு அனுப்பிய சங்கேத மொழியிலான செய்தியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முற்றும் துறந்தவர்களை முனிவர்கள் என்கின்றனர். ஆனால், கார்ப்பரேட் யுகத்தில் எல்லாவற்றையும் அனுபவிக்கும் போலிகளே யோகிகளாக அழைக்கப்படுகிறார்கள்.

சித்ரா ராமகிருஷ்ணனுக்கு யோகி அனுப்பிய செய்தி, ‘‘பைகளைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளுங்கள் நான் அடுத்த மாதம் செஷெல்ஸ் செல்ல வேண்டும்; நீங்களும் என்னோடு வர வேண்டும். அதற்கு முன்பு காஞ்சனா மற்றும் பர்கோவாவோடு லண்டனுக்குச் சென்று வர வேண்டும். நீங்கள் நியூசிலாந்திற்கு இரண்டு குழந்தைகளோடு செல்ல வேண்டும். ஹாங்காங் வழியாக அல்லது சிங்கப்பூர் வழியாக உங்கள் பயணத் திட்டம் அமைய வேண்டும்.’’ என்பது போன்ற செய்தியை அனுப்பியிருந்தார்.

செஷெல்ஸ்க்கு இந்தியாவிலிருந்து 4 மணி நேரத்திற்குள் செல்லும் நேரடி விமானம் கடந்த 2014 ஆண்டு முதல் இருக்கிறது. அப்படி இல்லையென்றாலும் துபாய் அல்லது இலங்கை வழியாக செய்ஷெல்ஸ் செல்ல முடியும். ஆனால் யோகி சித்ரா ராமகிருஷ்ணாவிற்கு சிங்கப்பூர் அல்லது ஹாங்காங் வழியாக செல்ல வேண்டும் என்று ஏன் அறிவுறுத்தினார்? அங்கிருந்து செஷெல்ஸ்சுக்கு நேரடி விமானங்கள் இல்லை. எட்டு மணி நேரத்திலிருந்து 10 மணி நேர பயணமாகும். எனவே இந்தப் பயணத் திட்டத்திலேயே பல ரகசியங்கள் மண்டிக் கிடக்கின்றன.

செய்ஷெல்ஸ், சிங்கப்பூர், மொரீசியஸ், சுவிட்சர்லாந்து ஆகியவை வரி ஏய்ப்பு செய்து கருப்பு பணத்தை வெள்ளைப் பணமாக்கும் முக்கிய இடங்களாகும். இதற்கும் யோகிக்கும் என்ன சம்மந்தம்?

சித்ரா ராமகிருஷ்ணனுக்கு ஒரு பெண் குழந்தை தான் இருக்கிறது. அவர் இரண்டு குழந்தைகளோடு பயணத்திட்டம் வகுத்தது ஏன்? அப்படி என்றால் வேறொருவரை அவரோடு அழைத்துச் செல்வதற்கான சமிஞ்கையாகவே இந்தச் சொல்லாடலைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

மும்பை பங்குச் சந்தைதான் (பி.எஸ்.இ.) இந்தியாவில் ஒரே பங்குச் சந்தையாக இருந்தது. இதையொட்டியே மற்றொரு பங்குச் சந்தையை அரசே உருவாக்கியது. அதுவே தேசிய பங்குச் சந்தை (என்.எஸ்.இ.)ஆகும். முதலில் தேசிய பங்குச் சந்தையின் தலைவராக ஆனந்த் சுப்பிரமணியன் நியமிக்கப்பட்டார். அதன் பின்பு அவரால் நியமிக்கப்பட்டவர் தான் இந்த சித்ரா ராமகிருஷ்ணா.

இதுபோல இருவருக்கிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட மின் அஞ்சல் தகவல்கள் பல, செய்ஷெல்ஸ் நாட்டுடன் இந்தியா கருப்பு பணம் குறித்த தகவல்களைத் தர வேண்டும் என்ற ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு முன்பே இந்த ரகசிய தகவல்கள் பரிமாறப்பட்டிருக்கின்றன. கடந்த 2015 ஆகஸ்டில்தான் இந்த ஒப்பந்தம் நிகழ்ந்தேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, ஏதோ ஒரு கார்ப்பரேட் நிறுவனத்திற்கு ஆதரவாக, பண ஆதாயத்திற்காக இவர்கள் செயல்பட்டிருப்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

பொதுவாக அரசுகளே இது போன்ற உளவு வேலைகளில் ஈடுபட்ட காலங்கள் உண்டு. பழங்காலத்தில் தொழிற்புரட்சிக்குப் பிறகு இங்கிலாந்தில் இருந்து தொழில்நுட்பங்களைத் திருடுவதற்கு அமெரிக்க அரசை நிறுவிய மூதாதையர்களே முயன்றிருக்கிறார்கள். அலெக்சாண்டர் ஹாமில்டன் மற்றும் பெஞ்சமின் பிராங்களின் போன்றவர்கள் பிரிட்டிஷ் தொழில்நுட்பத்தையும், தொழில்நுட்ப பணியாளர்களையும் அமெரிக்காவிற்கு கொண்டு வந்து சாமுவேல் சிலேட்டர் என்பவர் முதன் முதலாக நீராவி சக்தியின் மூலம் இயங்கும் நூற்பாலையை கட்டினார். இதனை இங்கிலாந்து பத்திரிகைகள் ‘முதுகில் குத்திய துரோகி’ என்று எழுதின.

நவகாலனியாதிக்க அமலாக்கத்திற்குப் பிறகு 1990களில் ஆண்கள் முகச்சவரத்திற்குப் பயன்படுத்தும் அமெரிக்காவைச் சேர்ந்த ஜில்லெட் ரேசர் தனது ஒரு பணியாளரைச் சந்தேகித்தது. அவர் மூலமாகத்தான் தொலைநகல் மற்றும் இமெயில் வாயிலாக இந்தத் தொழில்நுட்பங்கள் அனைத்தும் போட்டியாக உள்ள தொழிற் நிறுவனத்திற்கு அனுப்பியது தெரிய வந்தது. எனவே, அமெரிக்காவில் இதுபோன்ற உளவுகளுக்கு எதிராகச் சட்டமே கொண்டு வரப்பட்டு பத்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், வழக்குக்கு ஏற்ற ரொக்க அபராதமும் விதிக்க முடியும்.

கணினி, மின்னணு, வலைப்பின்னல் வழியாக ரகசியமாக ஊடுருவுவது, சைபர் அட்டாக் செய்வது, உளவாளிகளை நியமிப்பது, லஞ்சம் கொடுப்பது ஆகியவை வியாபித்து வருகிறது. ஜெர்மனியில் ஒட்டுமொத்தமாக 50 சதத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்த பாதிப்பிற்கு உள்ளாவதாகச் சொல்லப்படுகிறது.

ஐரோப்பிய யூனியனைச் சார்ந்த நாடுகளில் இப்படிப்பட்ட உளவு பார்த்தல் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. இது நிறுவனங்களைப் போட்டி நிறுவனங்கள் உளவு பார்ப்பது என்பதோடு அடங்காமல் அரசு துறைகளையும் உளவு பார்த்து அதை கார்ப்பரேட் நலனுக்காகப் பயன்படுத்தும் ஒரு தகாத முறை ஆகும். இந்த முறை இன்று உலகில் புகாத துறையே இல்லை.

இந்தியாவில் உலகமய அமலாக்கத்திற்கு பிறகு, அதுவும் மோடியின் ஆட்சியின் கீழ் கார்ப்பரேட் துறை இன்று நாட்டின் கொள்கைகளை வகுக்கும் அனைத்து நிறுவனங்களையும் சீரழித்துள்ளது. கார்ப்பரேட் நலனுக்காகவே இந்த அரசு எந்த பாதகத்தையும் தொடர்ந்து செய்யத் துணிந்து விட்டது.

கார்ப்பரேட் துறை உளவு இந்தியாவில் நிலக்கரி, எண்ணெய் மற்றும் மின் சக்தி அமைச்சகங்கள், பாதுகாப்புத்துறை சம்மந்தப்பட்ட தளவாடங்கள், வெளியிடப்படாத பட்ஜெட் ரகசியங்கள் அனைத்தும் உளவாளிகளால் கசிய விடப்படுகின்றன.

அமலாக்கத்துறை அதானியின் நிறுவனம் குறித்து 2013ல் ரிசர்வ் வங்கிக்குப் புகார் அளித்திருந்தது. ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்குச் சொந்தமான எண்ணெய் வயல்கள் பல அம்பானிக்கு கைமாறியது. இந்தத் தகவல்களின் அடிப்படையில்தான், வோடாபோன் நிறுவனத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அரசுத் தலைமை வழக்குரைஞருக்கு உயர்நீதிமன்றம் அறிவுரை வழங்கியது.

நாட்டின் இயற்கை வளங்கள் மற்றும் கனிம வளங்களை மக்களின் வரிபணத்தில் அனுப்புகிற செயற்கைக் கோள்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. அந்த ரகசியங்கள் எல்லாம் கார்ப்பரேட்டுகளுக்கு அறிவிக்கப்பட்டு ஏலங்களும், பேரங்களும் நடைபெற்ற வண்ணமே இன்றைய கார்ப்பரேட்டுகளின் வளர்ச்சி இத்தகைய உயர்வைக் கண்டிருக்கிறது. அரசின் உதவி இல்லாமல் எந்த ஒரு கார்ப்பரேட் நிறுவனமும் வெற்றிகரமாக இயங்க முடியாது.

**இந்தியாவில் 101 நபர்கள் என்று இருந்த பெரும் பணக் காரர்கள் எண்ணிக்கை, இந்தக் கொரோனா காலத்தில் 141 பேராக வளர்ந்துள்ளனர். அத்துடன் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரூ.23 லட்சம் கோடியாக இருந்த கார்ப்பரேட்டுகளின் சொத்து மதிப்பு இன்று ரூ.53 லட்சம் கோடிகளைத் தாண்டியிருக்கிறது என்றால், வெறும் உழைப்பால்தான் இவையெல்லாம் சாத்தியம் என்பது பச்சை அயோக்கியத்தனம் ஆகும். அரசு அள்ளி அள்ளிக் கொடுத்த தால்தான் இவ்வளவும் நடந்தது என்பதே உண்மை!**

அறிவுசார் சொத்துரிமை என்ற பெயரில் பன்னாட்டுக் கம்பெனிகள் கொள்ளையடிக்க பெரும் வாய்ப்பை உலகமயம் வாரி வாரி வழங்கியது. 1987ல் பீச் – நட் கம்பெனி வெறும் இனிப்புத் தண்ணீரை ஆப்பில் பழச்சாறு என்று விற்றது. இந்த மோசடியைக் கண்டறிந்து அந்நிறுவனத்தின் மீது அரசுகள் 2.2 மில்லியன் டாலர் அபராதம் விதித்தன.

2008ல் குழந்தைகளுக்கான பால் விநியோகம் செய்கிற நிறுவனம் சீனாவில் கலப்பட பாலை விற்கிறது என்பது கண்டறியப்பட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால், 2012ல் நமது இந்திய அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம் (எப்.எஸ்.எஸ்.எ.ஐ.) இந்தியாவில் விற்பனையாகும் பாலில் யூரியா என்ற ரசாயன உரமும், டிடர்ஜெண்ட் சோப்பு தூள்களும் கலப்பதை கண்டறிந்தது. 1954 ஆம் ஆண்டிலேயே உணவு கலப்பட தடைச் சட்டம் கொண்டு வந்திருந்தாலும் இன்று வரை அந்த நிறுவங்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை இந்திய அரசாங்கம்.

குறைந்த பட்ச அரசு, அதிகபட்ச நிர்வாக ஆளுகை என்று சொன்ன மோடி ஆட்சி காலத்தில்தான் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு நமது நிர்வாகத்துறை முழுவதும் ஒட்டுமொத்தமாக கார்ப்பரேட்டுகளின் நண்பர்களாக மாறிப்போயுள்ளன.

மக்களுக்கான எந்த நலத்திட்டங்களும் இன்று அவர்களை மீறி செயல்படுத்தப்படுவதில்லை என்பதே உண்மை. இதன் காரணமாகத்தான் நமது நாட்டின் வரிவிதிப்பில் கார்ப்பரேட்டுகளுக்கு பெரும் நன்மையும், சாதாரண மக்களுக்கு சுமையும் அளிக்கும் வழிமுறை நிறுவப்பட்டாயிற்று.

கார்ப்பரேட்டுகளின் தலைமை அதிகாரிகளுக்கு (சி.இ.ஓ.) மிக உயர்ந்த ஊதியம் அளிக்கப்படுகிறது. மறுபுறத்தில் கோடிக்கணக்கான உழைப்பாளி மக்களுக்கு ஊதிய உயர்வு என்பது பெயரளவுக்கு மட்டுமே அளிக்கப்படுகிறது.

உழைப்போடு சம்பந்தமில்லாத பங்குச் சந்தையின் புள்ளிகள் ஏறுவதும், இறங்குவதும் ஏதோ கார்ப்பரேட் நிறுவனங்களின் அதிவேக வளர்ச்சியால் வந்த கவர்ச்சி அல்ல என்பதும், சுழற்சி முறையில் இந்த ரகசிய தகவல்களை இமயமலையில் இருக்கும் யோகிகளுக்குப் பரிமாறி அந்தப் பற்றற்ற யோகிகளும் தங்கள் மீது பற்றுள்ள பக்தர்களின் கார்ப்பரேட்டுகளுக்கு பக்கபலமாக நின்று செயல்பட்டதும் இன்று சித்ரா ராமகிருஷ்ணா மூலம் வெளிவந்து விட்டது.

இவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட செபி உண்மையில் ஒழுங்குபடுத்துவதற்கு இன்று பயன்படுத்தப் படுகிறதா? என்பதே கேள்வி. நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை, நிதிச் சுதந்திரம் இவை அனைத்தையும் வெட்டி வீழ்த்தும் இந்த முறைக்கு மாற்று ஒன்றே இன்றைய உடனடித் தேவை. ஒரு சமத்துவ சமூக அமைப்பின் மூலமே இவை அனைத்தும் சாத்தியம்.

தொடர்புக்கு: **94444 81703**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 47

# உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் ஆரோக்கிய அரசியலின் அடிப்படை

தமிழ்நாட்டில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 நகர பஞ்சாயத்து ஆகியவற்றில் உள்ள 12,838 உறுப்பினர் பொறுப்புகளுக்கான தேர்தல் பிப்ரவரி 19 ஒரே நாளில் தமிழ் நாடு முழுமையும் நடந்தது. பிப்ரவரி 22ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டு விட்டன.

அனைத்து மாநகராட்சிகளிலும், மிகப்பெரும் அளவில் நகராட்சிகள், நகர பஞ்சாயத்துகளிலும் திராவிட முன்னேற்ற கழகமும், அதன் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளும் வெற்றி பெற்றிருக்கின்றன.

கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டாலும், பொதுவாக உள்ளாட்சித் தேர்தல்களில் பேசிய வண்ணம் களத்தில் நிறைவேறுவதில்லை. ஆனால் இதற்கு முந்தைய தேர்தல்களில் ஒப்பிடும்போது இந்தத் தேர்தலில் கூட்டணி விஷயத்தில் ஓரளவு முன்னேற்றத்தைக் காண முடிந்தது.

சென்னை போன்ற பெருநகரங்களில் 50 சதவீதத்துக்கும் குறைவாகவே வாக்கு பதிவாகி இருப்பது கவலையளிப்பதாக உள்ளது. இதன் காரணங்களைக் கண்டறிந்து நீக்குவது அவசியம்.

இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் மிக வேகமாக நகரமயமாகி வருகிறது. நகரங்களில் வசிக்க வந்துவிட்டாலும், ஓய்வு பெற்றதற்குப் பின்பு புறநகர்ப் பகுதியில் வீடு வாங்கி தங்கி விட்டாலும், சென்னையைத் தனது ஊர் என்று ஏற்றுக்கொள்ள மனம் வருவதில்லை. அவர்களது நெஞ்சங்களில் தமது சொந்த ஊரே நிரம்பியிருக்கிறது. மூன்று நாட்கள் தொடர் விடுமுறை வந்து விட்டால் சென்னையில் பாதி காலியாவதை நம்மால் பார்க்க இயலும்.

அன்னியர்களையும், வேற்றாளையும் பார்த்தால் பயம் கொள்ளும் மனோநிலைக்கு ஜெனோஃபோபியா என்று பெயர். நகரத்தில் வந்து தங்கி விட்டாலும், குடியிருப்பு, வேலையிடம் இரண்டிலும் மிகக் குறைவானவர்களிடமே பழக்கம் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இவர்களது வீடுகளின் கதவுகள் எப்போதும் மூடப்பட்டிருக்கின்றன. எந்த நேரத்திலும் பாதுகாப்பற்ற, ஒரு அச்சச் சூழலிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தனக்கு வாக்கு இருக்கிற பகுதியில் உள்ள மக்கள், அவர்களது பழக்க வழக்கங்கள், கட்சிகள் அவற்றின் பிரதிநிதிகள் எதிலுமே தொடர்பற்றவர்களாக வாக்காளர்கள் இருக்கின்றனர். வேட்பாளர் யார் என்று கூட அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. வாக்களிக்கத் தகுந்த வேட்பாளரைத் தேர்வு செய்வதும் இல்லை; வாக்களிக்க சாவடிக்கு வருவதுமில்லை என்ற நிலை அதிகரிக்கிறது.

குடும்ப அட்டை, ஆதார் அட்டை, கடவுச்சீட்டு எல்லாவற்றையும் காசு கொடுத்தால் வாங்கித் தர முகமைகள் வந்துவிட்டன. மளிகை சாமான்கள், சாப்பாடு கூட ஆன்லைன் வழியே வீட்டுக்கு வருகிறது.

சொந்த வாழ்க்கை அனுபவங்கள் மூலமாக இல்லாமல், ஊடகங்கள் வழியே தான் இவர்களுக்கு சமூக அறிவு ஊட்டப்படுகிறது. இவர்களுக்குள் ‘ஜெனோஃபோபியா’வை உயிர்ப்பித்து, இவர்கள் எல்லாம் உங்களுக்கு எதிரானவர்கள், நாங்கள் மட்டுமே உங்களுக்கு பாதுகாப்பு என்று திரும்பத் திரும்பச் சொல்லி, ஒதுங்கி வாழ்பவர்களின் உள்ளங்களை, வளைத்துக் கொள்ள முடியும். மதமும், சாதியும், சாமியும் நம் மக்கள் மனதிலிருந்து மறந்து போகாத விஷயங்கள். எனவே அவற்றைக் கொண்டு வளைத்துப் போடுவது எளிது.

ஒன்றிய அரசாங்கம், மாநில அரசாங்கம், அடுத்ததாக மூன்றாம் அடுக்கு அரசாங்கமாக இருப்பது உள்ளாட்சிகள்தான். ஆனால் உள்ளாட்சிகளுக்கு உரிய அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்காமல், அவை அதிகாரிகள் ராஜ்ஜியமாகவே மாற்றப்பட்டுவிட்டன. ஆறாண்டு காலத்துக்கும் மேலாக உள்ளாட்சியில் மக்கள் பிரதிநிதிகளே இல்லை. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரத்துக்கு வந்து விட்டாலும் கூட, முடிவெடுக்கும் அதிகாரம் அதிகாரிகளிடமே தொக்கி நிற்கிறது. இந்த முறை முதலில் மாற்றப்பட வேண்டும்.

உள்ளாட்சிகளுக்கு முழு அதிகாரம் அளிக்கும், அதிகார பரவல் நடவடிக்கையை மேற்கொள்வது தமிழ்நாடு அரசின் முதல் கடமையாகிறது. மக்களோடு தொடர்பு உடையதாக உள்ளாட்சிகள் மாற்றப்பட வேண்டியது ஆரோக்கிய அரசியலுக்கான அடிப்படையாகும்.

வாக்களிப்பதற்கு பணம் தருவதன் மூலம், தமது ஊழல்களில் மக்களையும் முன்பணம் வாங்கிய பங்காளர்களாக மாற்றிக் கொள்ளும் வழக்கம் அபாயகரமான அளவுக்கு அதிகமாக இருக்கிறது. தமக்கான நியாயமான சான்றிதழ்களை வாங்குவதற்கு கூட அதிகாரத்தில் உள்ளவர்களுக்குப் பணம் தந்தாக வேண்டும் என்ற வாழ்க்கை நியதி, வாக்களிக்கும் அதிகாரம் தன்னிடம் இருக்கும் போது தேவையானவர்கள் பணம் தரட்டும்; தரவேண்டும் எனக் கருதும் விஷம் தோய்ந்த எண்ணப்போக்கு ஆழமாக உருவாக்கப்பட்டு விட்டது.

செலவழிக்கப் பணம் இல்லை என்பது, தேர்தலில் நிற்பதற்கான தகுதி இழப்பு என்றாகிறது. வேலைவாய்ப்பு, ஊதியம், கல்வி, மருத்துவம் எல்லாவற்றையும் சந்தை நிர்ணயிக்கட்டும் என்ற தாராளமய கொள்கை தேர்தலிலும் ஆடும் தாண்டவம் இது.

மாற்றியமைக்கப் போராடுவோம்!

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India

தலையங்கம்
(பிப். 20 - பிப். 26)

# வாக்களிக்கும் முன் உ.பி., மற்றும் கேரளாவை ஒப்பிடுங்கள்!




உத்தரப்பிரதேச மாநிலச் சட்டமன்றத்திற்கான தேர்தல் தொடங்கி நடக்கிறது. ஆர்எஸ்எஸ் பாஜக பெருந்தலைவர்கள் தங்கள் அரசியல் எதிர்காலம் குறித்துப் பரபரப்பான ஆர்வம் கொண்டுள்ளனர். உத்தர்காண்ட், பஞ்சாப், மணிப்பூர் மற்றும் கோவா மாநிலங்களிலும் தேர்தல் நடக்கவிருந்தாலும் சங் பரிவாரின் பெருந்தலைகளுக்கு உ.பி குறித்தே கூடுதல் பதற்றம்.

உபியின் தேர்தல் முடிவு 2024ல் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நேரடியான பாதிப்பைச் செலுத்தும் என அவர்கள் நம்புகிறார்கள். எனவேதான் தங்கள் வசமுள்ள வாய்ப்பு வசதிகளின் பெரும் பகுதி, நேரம் மற்றும் சக்தி அனைத்தும் வடஇந்தியாவின் அந்த மாநிலத்தில் களம் இறக்கியுள்ளனர்.

தொடக்கத்தில் இமாலய வெற்றி சுலபமாகப் பெறலாம் என மோடி, யோகி, அமித்ஷா கூட்டு எண்ணியது. எதிர்கட்சிகள் ஒற்றுமை ஏற்படவில்லை என்பதால் பரிவார் கும்பலின் நம்பிக்கை மட்டம் எகிற, யோகி சகாப்தம் தொடருமென்று பேசினர். ஆனால் எதார்த்தத்தில் மக்களின் மனநிலை, மோடி கூடாரத்தின் விருப்பத்திற்கு மாறாக, வேறுவழியில் செல்கிறது.

பதற்றம் அதிகரித்த நிலையில் ஆதித்தியநாத் பிரச்சாரக் கூட்டங்களில் திரும்பத் திரும்ப கேரளாவைச் சுட்டிக்காட்டுவது எதிர்பாராத விபத்து அல்ல. கேரளாவைக் குற்றம்சாட்டும் அவரது விஷமத்தனமான பேச்சு திட்டமிட்ட நடவடிக்கை. சங் பரிவார் கும்பல் பிரச்சாரத்தை மக்கள் பிரச்சனைகளிலிருந்து திசைதிருப்ப விரும்புகிறது.

2017ல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற உபியின் பல பகுதிகளில் வகுப்புவாத மோதல்களைக் கட்டவிழ்த்து விட்டனர். 2022ல் புதிய ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளுடன் களம் இறங்கியுள்ளனர். உண்மையில் ஐந்து ஆண்டுகால ஆட்சி நெடுக அவர்கள் இதைத்தான் செய்து வந்தார்கள், யோகி அரசு நீண்டகாலமாகவே வெறுப்பை விதைத்து வருகிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட ஆயோத்தியா காலடித் தடத்தைப் பின்பற்றி வாரணாசி மற்றும் மதுராவின் ஆலயங்களைச் சுற்றி தங்கள் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர். அவர்களது உச்சபட்ச வகுப்புவாதப் போர்வெறிக் கூச்சல் இஸ்லாமிய வழிபாட்டுத்தலங்களுக்கு எதிராக உள்ளது. அது ‘பிரித்தாள்வது’ என்ற ஒரே காரணத்துடன் குருட்டுத்தனமான அணுகுமுறையாகும். பிரம்மாண்டமான பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து முன்னெடுத்தாலும், (ராமர்) கோயில் மசூதி சர்ச்சை ஒன்று மட்டுமே இம்முறையும் அவர்களைக் காப்பாற்றி கரையேற்றிவிடாது என்ற ஞானம் மெல்ல அரும்பத் தொடங்கியுள்ளது.

யோகி ஆதித்தியநாத் கேரளாவுக்கு எதிரான தனது பிரச்சாரத்தில் மகாராஷ்டிரா மற்றும் வங்காளத்தையும் கூடுதல் சுவைக்காகச் சேர்த்துக் கொண்டுள்ளார். ஆனால் பரிதாபம், அந்தக் கணைகள் பலவழிகளில் அவர்களுக்கு எதிராகவே திரும்பித் தாக்கத் தொடங்கியுள்ளது. உபி மக்களின் இன்றைய முதலமைச்சர் கேரளாவின் சமூக அரசியல் எதார்த்த வாழ்வை ஆழமாக ஊடுருவிப் பார்க்க தன் மக்களை வற்புறுத்தியுள்ளார். இவ்வாறு அவர் கோரியுள்ளது, இரண்டு மாநிலங்களின் ஆட்சி முறைகளுக்கு இடையே உள்ள வித்தியாசங்களை விளக்கிட இடதுசாரிகள் மற்றும் ஜனநாயக சக்திகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கியுள்ளது.

கேரளாவை மிகவும் வளர்ச்சிபெறாத நிலப் பகுதி, நாகரீகம் அடையாத புராதன மனிதர்கள் வாழ்கிறார்கள் என அறிமுகம் செய்கிறார்கள்! இதன் காரணமாகத்தான் யோகி ஆதித்தியநாத் அந்த மாநில வாக்காளர்களைப் பார்த்து, தன்னை ஆட்சி அதிகாரத்திலிருந்து நீக்கினால், உபி மற்றொரு கேரளா போன்று ஆகிவிடும் என்று அச்சுறுத்த முடிகிறது.

உண்மை என்ன?

கேரளா மற்றும் உபி மாநிலங்களின் வாழ்வியல் உண்மை நிலைதான் என்ன? நாம் சொல்வதைவிட கேரளாவின் வளர்ச்சிக் குறியீடுகளே பேசட்டும், பிறகு மக்கள் அதனை உபி மாநிலத்தோடு ஒப்பிடட்டும்! ஒன்றிய அரசின் நிதி ஆயோக் தரும் ‘பன்முக ஏழ்மை குறியீடு’ அறிக்கை 2021ல் இத்தகவல்கள் உள்ளன. அதன்படி உபி மாநில மக்களில் 37.79 சதவீதத்தினர் ஏழைகள்; கேரளாவில் ஏழ்மை விகிதம் வெறும் 0.71 சதவீதம், அதாவது ஒரு சதவீதத்திற்கும் குறைவானது என்று சுட்டிக் காட்டுகிறது.

பன்முக ஏழ்மைக் குறியீடு என்பது குடும்பங்களின் ஆரோக்கிய சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரம் முதலியவற்றைக் கணக்கில் கொண்டு திரட்டப்படுவது. சுகாதாரம் என்பதில் ஊட்டச் சத்து, ஐந்து வயதிற்குக் குறைவான குழந்தைகள் இறப்பு விகிதம், பிரசவத்தின்போது தாய் உயிரிழப்பு விகிதம் மற்றும் பாலூட்டும் தாய்மாரின் ஆரோக்கியம் முதலியன கணக்கில் கொள்ளப்படுகிறது.

கல்வி என்பதன் கீழ் பள்ளியில் படிக்கும் ஆண்டுகள், குழந்தைகளின் பள்ளி வருகை முக்கியமாகும். சமையல் எரிபொருள், வாழிடத் தூய்மை, குடிநீர், மின்வசதி, வீட்டு வசதி முதலியன கிடைக்கும் வாய்ப்பு மற்றும் சொத்துடைமை, வங்கிக் கணக்கு முதலியனவற்றின் அடிப்படையில் வாழ்க்கைத் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. பன்முக ஏழ்மை குறியீடு உபி மக்களின் ஊட்டச் சத்து மட்டத்தின் அளவு மிகக் குறைவாக மிகவும் கீழே உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.

யோகி எந்தக் கேரளா மாநிலத்தை இழிவுபடுத்த விரும்புகிறாரோ, அந்தக் கேரளா நிதி ஆயோக்கின் 2020 21ஆண்டிற்கான நாட்டின் ‘நிலைத்த வளர்ச்சி இலக்கு குறியீட்டில்’ முதல் இடத்தில் உள்ளது. சுகாதாரம், கல்வி மற்றும் சமூக நலம் போன்ற பிரிவுகளில் கேரளா நுணுக்கமாகத் திட்டமிட்டு சாதித்த வளர்ச்சிகளை உலகம் கவனத்தில் கொண்டிருக்கிறது.


உத்தரப்பிரதேச மக்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டால், நிச்சயம் அவர்கள் கேரளா பாதைக்குத்தான் வாக்களிப்பார்கள்.

உ.பி.மாநிலத்தில் ஆட்கடத்தல் 12,913 வழக்குகளும் கொலைகள் 3779 வழக்குகளும் உள்ளன. இந்த எண்ணிக்கையில் கேரள மாநிலம் கண்ணுக்கெட்டிய தூரம் அருகிலேயே இல்லை.

யோகி ஆதித்தியநாத்தின் சவாலை ஏற்க கேரளா தயாராகவே உள்ளது. 1957 முதல் அம்மாநிலத்தில் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் உறுதியுடன் நின்று மக்கள் நட்புறவான வளர்ச்சிப் பாதையை வளர்த்தெடுத்து வருவது குறித்தும் தங்கள் சாதனைகள் குறித்தும் பெருமிதம் கொள்கிறார்கள்.

தமிழில்: **நீலகண்டன்**

தத்துவார்த்தம் 18



எஸ். தோதாத்ரி

வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 6

# சமுதாய அமைப்புகள்

**மார்க்சியம் வரலாற்று வளர்ச்சியில் வளர்ந்த சமுதாய அமைப்புகளை வகைப்படுத்திக் கூறுகிறது. 1) புராதன பொதுவுடமை அமைப்பு, 2)அடிமைச் சமுதாயம், 3) நிலவுடைமைச் சமுதாயம், 4)சோசலிச சமுதாயம், 5) கம்யூனிஸம்.**

புராதன பொதுவுடமை சமுதாயம் என்பது கருவிகள் அதிகம் முன்னேறாத காலத்தில் இருந்தது. இந்த அமைப்பில் மக்கள் சமூகமாகவே வாழ்ந்தனர். வர்க்க வேறுபாடுகள் இல்லை. இயற்கையில் கிடைத்த கற்கருவிகள் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டன. பின்னர் இரும்பு இடம்பெற்றது. எல்லோரும் உழைத்தனர். வேட்டைப் பொருளை கொண்டு வந்து பகிர்ந்து உண்டனர். ஆண்களும் பெண்களும் சமமாக வாழ்ந்தனர். தமிழ் நாட்டில் குறிஞ்சி நில மக்கள் இதற்கு உதாரணமாகக் கூறலாம். இங்கு உள்ள உறவு ரத்த சம்பந்தமான உறவு. இதனை இனக்குழு சமுதாயம் என்றும் அழைக்கின்றனர். இதில் கருவிகள் முன்னேறத் தொடங்கின.

அதாவது மனிதன் புதிய கருவிகளை பயன்படுத்த தொடங்கினான். உபரி உற்பத்தி ஏற்பட்டது. இதனைப் பரிவர்த்தனை செய்தனர். ஒரு குழு மற்றொரு குழுவுடன் உறவு கொண்டது. இந்த பரிவர்த்தனை சிக்கல்களைத் தோற்றுவித்தது. இதன் காரணமாக போர்கள் இடம்பெற்றன. தோல்வியடைந்த குழுவை வெற்றி பெற்ற குழு அடிமைப்படுத்தியது. சங்ககாலத்தில் இனக் குழுக்களுக்கு இடையே நடந்த போர்களைப் பற்றி சங்கப் பாடல்கள் கூறுகின்றன.

உலகம் எங்கினும் இந்த அடிமைச் சமுதாயம் இருந்தது. இப்பொழுது விவசாயம் நடைமுறைக்கு வந்த காலம். விவசாயம் செய்ய நிறைய ஆட்கள் தேவைப்பட்டனர். போரில் பிடிக்கப்பட்ட அடிமைகள், வசதியற்ற இனக்குழுவினர் அடிமைகளாக மாறியது ஆகியன அடிமை எண்ணிக்கையைக் கூட்டியது. இவர்கள் பண்ணை அடிமைகள் நிலத்தோடு நிலமாக பிணைக் கப்பட்டவர்கள். இவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நிலத்தை ஒரு பண்ணையார் வாங்கினால், இந்த அடிமைகளும் அவருக்குச் சொந்தமாகினர். எகிப்து, ரோம் ஆகிய நாடுகளில் இது அதன் கோரமான வடிவத்தில் இருந்தது.

இந்த அடிமைகள் ஒரு கருவி, இதனை 'பேசும் கருவி' என்று அழைப்பர். தமிழகத்திலும் அடிமைகள் இருந்தனர். இதன் பிரதிபலிப்பை பக்திமார்க்க இலக்கியங்களில் காண லாம். உதாரணமாக சுந்தரமூர்த்தி நாயனார் சிவன் தனது அடிமை என்று கூறுகிறார். அதற்கு அடிமைச் சாசனத்தைக் காட்டுகிறார். திருவள்ளுவர் ஒரு குறளில் இம்முறையைச் சுட்டிக்காட்டுகிறார்.

**"எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து."**

இது அடிமைகளை விலங்கு நிலைக்கு வாங்கும் வழக்கம் வள்ளுவர் காலத்தில் இருந்ததைக் காட்டுகிறது. பக்தி மார்க்க இலக்கியம் முழுவதும் ஆண்டவனைத் தலைவனாகவும், பக்தனை அடிமையாகவும் காட்டுகிறது. இந்த சமுதாய அமைப்பானது தமிழகத்தில் களப்பிரர் காலம் தொடங்கி நிலவுடமை சமுதாயத்துடன் இணைந்தே இடம்பெற்றிருந்தது. இது மேலை நாட்டு வடிவத்திலிருந்து சற்று வேறுபட்டது. ஆனால் சாராம்சத்தில் ஒன்றே தான்.

**இந்த அமைப்பு உலகில் நாயன்மார்கள் இருந்த தில்லை. விவசாயப் பெருக்கம் காரணமாக சமுதாயத்தில் பல தொழில்களும் பெருகின. உபரி உற்பத்தியும் அதிகமாயிற்று. மேலை நாடு களில் பண்ணையடிமைகள் கலகம் செய்த னர். அடிமைகள் நடத்திய போராட்டங்கள் அடக் கப்பட்டன. இந்தியாவிலும் இத்தகையப் போராட் டங்கள் இடம்பெற்றன. ஆனால் இவை இங்கு சாதிய மோதல் களாக இருந்தன.**

இவற்றின் காரணமாக அடிமைமுறை மேலைய நாடுகளில் முற்றிலுமாக தகர்ந்தது. நிலப்பிரபுத்துவ முறை இடம்பெற்றது. இப்பொழுது பெரிய நிலப் பிரபுக்கள் தோன்றினர். இவர்களுக்கு நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டது. பழைய அடிமைகள் மேலை நாடுகளில் பண்ணையடிமைகளாக மாறினர். உற்பத்தி பெருகியது. பல புதிய தொழில்கள் தோன்றின. இதன் விளைவு நிலப்பிரபுத்துவ முறை மாறுதல் அடைந்தது. தமிழகத்தில் இந்த முறை அடிமை முறையும், நிலவுடமை முறையும் இணைந்த ஒன்றாகவே இடம்பெற்றிருந்தது. இது களப்பிரர் காலம் தொடங்கி பல்லவர் காலம் வரை இறுக்கமற்றதாக இருந்தது. சோழர் காலத்தில் இறுக்கமடைந்து நாயக்கர்கள் காலத்தில் இது சித றியது. ஆனால் சுய தேவைப் பூர்த்தி அமைப்பாக இருந்ததால் ஐரோப்பாவில் ஏற்பட்டது போல இங்கு மாறுதல் விரைவாக இடம் பெறவில்லை.



ஆனால் மேலை நாட்டில் ஏற்பட்ட கருவிகளின் முன்னேற்றம், சமு தாயத்தில் பெரும் மாறுதலை கொண்டு வந்தது. பழைய நிலபிரபுத்துவ வர்க்கம் தகர்ந்தது. இப்பொழுது கருவிகளின் சொந்தக்காரர்கள் என்ற பூர்சுவாக்களும், கூலி உழைப்பாளிகள் என்ற பாட்டாளிகளும் தோன்றினார். இதன் விளைவு பழைய முறைகள் முற்றிலும் மாற்றப்பட்டன. இது முதலாளித்துவ சமுதாயமாக உருப்பெற்றது.


இந்த அமைப்பில் ஏற்பட்ட பல மாறுதல்கள், லாபத்திற்கான உற்பத்தி போன்றவை பாட்டாளி வர்க்கத்தினரை முதலாளி களுக்கு எதிராக போராட வைத்தது. இது சோசலிசப் புரட்சியாக வெடித்தது. உலகின் முதல் சோசலிச அமைப்பு சோவியத் ரஷ்யாவில் உருவாயிற்று. பின்னர் இது ஜெர்மனி, போலந்து, ஹங்கேரி, கியூபா, சீனா, வியட்நாம் போன்ற நாடுகளில் தோன்றியது. ஆனால் முதலாளித்துவத்திற்கும் இதற்குமான முரண்பாடு இந்த அமைப்பில் ஏற்பட்ட அகமுரண்பாடு காரணமாக இன்று பின்னடைந்து உள்ளது.

மார்க்ஸ் இந்த அமைப்புகள் வருங்காலத்தில் கம்யூனிச சமுதாய அமைப்பை நோக்கி செல்ல வேண்டும் என்று கூறுகிறார். இந்த அமைப்பானது தொழில்நுட்பத்தில் மிகவும் முன்னேறிய அமைப்பு. உழைப்பிற்கான பொருள்கள் சமமாக பகிர்ந்து கொள்ளும் அமைப்பு. இதில் மனிதர்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொள்வார்கள் என்று கூறுகிறார். கம்பன் கோசல நாடு எப்படி இருக்கும் என்று கற்பனை செய்கிறான். அந்த நாட்டில் பொய் இல்லை; ஆகையால் உண்மை என்னவென்று தெரியாது. வலிமை இல்லை ஏனென்றால் பகைவர்கள் இல்லை. ஈகை என்பது இல்லை, வறியவர்கள் இல்லை அதனால் எல்லோரும் கற்றவர்கள் ஆகையினால் அறிவுடைமை என்று ஒன்று இல்லை. இதனை கம்யூனிஸம் என்று ஜீவா கூறுவார்.

**வண்மை இல்லை,**
**ஓர் வறுமை இன்மையால்;**
**திண்மை இல்லை,**
**ஓர் செறுநர் இன்மையால்;**
**உண்மை இல்லை,**
**பொய் உரை இலாமையால்;**
**வெண்மை இல்லை,**
**பல் கேள்வி மேவலால்.**


தொடர்புக்கு: **98947 83657**

சுழலும் உலகம்




## உக்ரைன் போர் சூழல் குறித்து

# ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் சிறப்பு அறிக்கை



# உக்ரைன் போர் சூழல் உண்மையான காரணம் என்ன?



**டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகளை அங்கீகரிப்பதே அமெரிக்க அசச்சுறுத்தலுக்கான ரஷ்யாவின் உரிய பதிலடியாக இருக்கும் என்று ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.**

கடந்த சில வாரங்களாக உக்ரைன் நாட்டின் சூழல் மிக மோசமாக சீரழிந்து வருகிறது. அந்நாட்டைக் கைப்பற்றும் நோக்கத்துடன் ரஷ்யா செயல்படுவதாக குற்றச்சாட்டுகள் குவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், அமெரிக்காவின் கைப்பாவைகளாக இருக்கும் உக்ரைன் தலைவர்களும், பண்டேரா கும்பலும் டான்பாஸ் பகுதியை ஒரு கொலைக்களமாக மாற்றிடத் தொடர்ந்து முயன்று வருவதுதான் இப்போதைய நெருக்கடிக்கு உண்மையான காரணம் ஆகும். அவர்கள், தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள மீண்டும் ஒரு வன்முறை வெறியாட்டத்தை நடத்த ஆயத்தமாகி வருகிறார்கள்.

டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் எல்லைப் பகுதிகளில் உக்ரைன் இராணுவம் குவிக்கப்பட்டு வருவதை மேற்கு உலகம் கவனத்தில் கொள்ள மறுக்கிறது. உக்ரைன் நாட்டின் போர்த் திறம்மிக்க படைகளின் அலகுகள் அந்தப் பகுதிகளில் குவிக்கப்பட்டு வருகிறது. கனரகத் துப்பாக்கிப் படைப்பிரிவு உள்ளிட்ட 1,25,000 போர் வீரர்கள் மற்றும் அலுவலர்கள் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டு உள்ளார்கள். வான்வழி இராணுவ ரோந்துப் பணிகளும் தொடருகின்றன. இந்த நடவடிக்கைகள் அனைத்தும் டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசு நாடுகள் மீது தாக்குதல் தொடுப்பதற்கான அறிகுறிகள் ஆகும்.

அமெரிக்க தகவலின்படி , உக்ரைன் எல்லைப் பகுதிகளில் உள்ள ரஷ்ய இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 1,00,000 ஆகும். டான்பாஸ் பகுதியில் உள்ள உக்ரைன் இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 1,25,000 ஆகும். மூன்று மடங்கு அதிக பலம் கொண்ட இராணுவம்தான் ஒரு வலுவான போரைத் தொடுத்து வெற்றி பெற முடியும் என்பது அனைவரும் அறிந்த ஒரு விஷயம் ஆகும். எனவே, எந்த நாடு எந்த நாட்டை அசச்சுறுத்துகிறது என்பதை எளிதில் விளங்கிக் கொள்ள முடியும்.


உடனடியாகப் போர் நடைபெறுவதற்கான அறிகுறிகள் இல்லை என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் மற்றும் உக்ரைன் இராணுவத் தலைமையும் கூட கருத்துத் தெரிவித்துள்ளன. ஈராக்கில் பயங்கர ஆயுதங்கள் இருப்பதாகப் பொய் பிரச்சாரம் மேற்கொண்டு அவப்பெயரைச் சந்தித்த அமெரிக்க நுண்ணறிவுத்துறை மீண்டும் அப்படி ஒரு மோசமான நிலையை ஏற்கத் தயாராக இல்லை என்பது தெளிவாகிறது. ஆனால், மேற்கு உலக தலைவர்களோ, நிதர்சனமாகக் கண் முன் நிலவும் சூழலைக் கூடப் புறந்தள்ளுகிறார்கள். அவதூறு பரப்புவது, தகவல்களைத் திரித்துக் கூறுவது என்று ரஷ்யாவுக்கு எதிரான ஒரு புதிய ரகப் போர் தொடுக்கப்படுகிறது.

சோவியத் ஒன்றியம் சிதைந்த பின்னர் தோன்றிய நாடுகளில் ரஷ்ய நலன்கள் அடங்கியிருப்பது உண்மை ஆகும். அமைதி, அண்டை நாடுகளுடன் நல்லுறவு, குடிமக்களுக்கான கண்ணியமான வாழ்க்கை, பொருளாதார மேம்பாடு மற்றும் பண்பாட்டு ரீதியிலான ஒத்துழைப்பு ஆகிய ரஷ்ய நலன்கள் உக்ரைன் நாட்டுச் சூழலில் அடங்கியுள்ளது.

அதே நேரத்தில், மேற்கு உலகம் மிகவும் பிற்போக்கான சக்திகளுக்காக உக்ரைனில் ஆதரவு திரட்டுகிறது. இன்றைய பண்டேரா கும்பலின் முன்னோர்கள் இரண்டாம் உலகப் போரின் போது ரஷ்ய மற்றும் உக்ரைன் இன மக்களைக் கொன்று குவித்தார்கள். இந்த வன்முறை வெறியர்கள் நாஜிக்களுடன் இணைந்து பெலாரஷ்யப் பகுதிகளைச் சார்ந்த ஊரகப் பகுதி மக்களை நூற்றுக்கணக்கில் எரித்துக் கொன்றுள்ளனர். தீவிர ரஷ்ய எதிர்ப்பு உணர்வு கொண்ட இந்தக் காட்டுமிராண்டிக் கும்பலை மேற்கு உலக அரசியல் தலைவர்கள் தொடர்ந்து ஆதரித்து வருகிறார்கள்.

டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் குடியரசு பகுதிகளில் ரஷ்ய குடியுரிமை பெற்ற மக்களின் எண்ணிக்கை 6,00,000க்கும் அதிகம் ஆகும். அந்த மக்களின் பாதுகாப்புக்கு ரஷ்ய நாடு தான் நேரடிப் பொறுப்பு ஆகும். பண்டேரா கும்பல் இந்தப் பகுதிகளுக்குள் நுழைந்து அந்த மக்களைப் பழிவாங்குவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பண்டேரா கும்பலின் நாசகர நடவடிக்கைகளை ரஷ்யா உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. காட்டுமிராண்டித்தனமாக நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதல்களால் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதியைச் சார்ந்த 15,000 க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்; பல்லாயிரக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர்; நூற்றுக்கணக்கானோர் அகதிகளாகப் பரிதவித்து வருகிறார்கள்.

**உக்ரைன் நாட்டின் டான்பாஸ் பகுதியில் உள்ள டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ் குடியரசுகளை அங்கீகரிக்கும் ஆணையில் 21.2.2022 அன்று ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் கையொழுத்திட்டார். இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் ரஷ்யா மீது விரையில் பொருளாதார தடைகள் விதிக்க இருப்பதாக அறிவித்துள்ளன.**



ரஷ்ய கூட்டமைப்பின் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் நேச சக்திகள், அவற்றின் நிலைப்பாட்டை மிகத் தீர்க்கமாக முன்வைத்துள்ளன. இந்த நிலைப்பாட்டை, **"To the Fraternal People of Ukraine"** என்ற முறையீட்டில் உக்ரைன் நாட்டு சகோதர பந்தங்களுக்கு 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று நாம் பிரகடனப்படுத்தி இருக்கிறோம். உக்ரைன் நாட்டு சகோதர பந்தங்களுக்கான இந்த அறைகூவலை "தோழமை உணர்வு எனும் போற்றத்தக்க பிணைப்பின் பெயரால்" **(In the Name of the Sacred Bonds of Comradeship)** ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் மீண்டும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

ரஷ்ய மற்றும் உக்ரைன் நாட்டு மக்களுக்கு போர் தேவையற்ற ஒன்றாகும். அத்தகைய ஒரு போர் ஐரோப்பிய கண்டத்தின் நலனுக்கு எதிரானது ஆகும். ஆனால், அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு அத்தகையதொரு போர் தேவைப்படுகிறது.

கடந்த காலங்களில் நடைபெற்ற அனைத்துப் போர்களிலும் அமெரிக்கா தோல்வியைத் தழுவியது. கொரியா, வியட்நாம், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளின் மீது வெளிப்படையாகத் தாக்குதல் தொடுத்த அமெரிக்கா, வெட்கக்கேடான தோல்விகளையே தழுவியது. எனவே, இப்போது மறைமுக போர்களை நடத்த விரும்புகிறது. இந்தமுறை அமெரிக்கா, அதன் போர்வெறிக்கு உக்ரைன் நாட்டு மக்களை இரையாக்கத் துடிக்கிறது. அரசியல் ஆதரவு, ஆயுதங்கள் வழங்குவது, மேற்கத்திய ஆலோசகர்களை அனுப்புவது என்று அமெரிக்காவின் தொடரும் ஆதரவுப் போக்கு உக்ரைன் நாட்டு ஆட்சியாளர்களை ஒரு போர் சாகசத்தை நோக்கிப் பிடித்துத் தள்ளுகிறது.

அமெரிக்க போர்த்தந்திர நிபுணர்கள், ரஷ்யா மற்றும் உக்ரைன் மட்டுமின்றி, ஐரோப்பிய கண்டத்தையும் அவர்களின் இலக்காகக் குறி வைத்துள்ளனர். உக்ரைன் சூழலைப் பயன்படுத்தி, நமது நாட்டின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா முயன்று வருகிறது. அதன் பொருளாதாரப் போட்டியாளரான ஐரோப்பிய ஒன்றியத்துடனான அமெரிக்காவின் போராட்டத்தில் இந்தச் சூழல் ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

ரஷ்யாவுடனான அமெரிக்காவின் வர்த்தகம் மிகக் குறைவாகவே உள்ளது. ஆனால், நமது நாட்டுடன் ஐரோப்பிய கண்டம் மிகவும் பரந்துபட்ட, லாபகரமான வணிகம் மற்றும் பொருளாதார உறவைக் கொண்டுள்ளது. எனவே, ரஷ்யாவுடனான ஒரு இராணுவ மோதல் மூலமாக, ஐரோப்பிய நாடுகளைப் பொருளாதாரத் தடைகளின் ஊடாக மேலும் பாதிப்புகளுக்கு உள்ளாக்கிட அமெரிக்காவுக்குச் சாதகமான சூழல் உருவாகும்.

உக்ரைன் நாட்டைப் பாதுகாப்பதன்று அமெரிக்க சர்வதேசியவாதிகளின் நோக்கம்! நார்டுஸ்ட்ரீம் 2 **(NordStream 2)** இயற்கை எரிவாயு குழாய் கட்டமைப்பை அழித்தொழித்து, விலையுயர்ந்த திரவமாக்கப்பட்ட எரிவாயுவின் மீதான சார்புத்தன்மையை நிலைநாட்டி, லாபமீட்டுவதே அவர்களின் நோக்கமாகும். இதுவே உக்ரைன் நாட்டைச் சூழ்ந்துள்ள போர் பதற்றத்துக்கான அடிப்படையான காரணம் ஆகும்.

மேற்கு உலகிற்கு அடிமைச் சேவகம் புரியும் பாதகமான கொள்கையை ரஷ்ய அரசாங்கம் ஒரு வழியாகத் தற்போது கைவிட்டுள்ளது. சிரியா, பெலாரஸ் மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளின் சட்டப்பூர்வ அரசுகளை நாம் ஆதரித்தது போன்ற, 2008 ஆம் ஆண்டில் அப்கசியா மற்றும் தெற்கு ஒசெட்டியா மக்களுக்கு நாம் ஆதரவாக, அரணாக நின்றதைப் போன்றதொரு உறுதியான நிலைப்பாட்டை இன்றைய சூழலில் நாம் மேற்கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம் ஆகும்.

ரஷ்யாவைப் பகை நாடுகள் சூழ்ந்துள்ளன. இனி பின்வாங்குவது சாத்தியமன்று; தேச நலன்களையும், அதன் நேச சக்திகளையும் பாதுகாத்து நிற்பதில் ரஷ்ய நாட்டின் உறுதிப்பாட்டை மேற்கு உலக நாடுகள் கட்டாயம் உணர வேண்டும்.

சமூகப் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் அடிப்படையான மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் மட்டுமே நமது தேச மக்களைப் பாதுகாத்திட இயலும். தற்போது நடைமுறையில் உள்ள சமூகப் பொருளாதாரப் போக்கை ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கிறது. சோஷலிச புனரமைப்பிற்கும், "மக்களுக்கான அதிகாரத்தை நோக்கிப் பத்து நடவடிக்கைகள்" எனும் மாற்றத்திற்கான திட்டத்தை கட்சி முன்மொழிகிறது.

ஆனால், சில பிரச்சனைகளுக்கு உடனடியாகத் தீர்வுகள் காணப்பட வேண்டும். ரஷ்யாவின் பாதுகாப்பை உறுதி செய்திட, டான்பாஸ் மக்கள் குடியரசின் சக குடிமக்களைப் பாதுகாத்திட அரசாங்கம் மேற்கொள்ளும் தீர்மானகரமான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க நாம் தயாராக உள்ளோம். 2014 ஆம் ஆண்டில் இருந்து டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் குடியரசுகளை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். 2014 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற போது வாக்கெடுப்பில் லட்சக்கணக்கான மக்களின் குரல் மிகத் தெளிவாக ஓங்கி ஒலித்தது. அவர்களின் குரலுக்கு ஆட்சியாளர்கள் நிச்சயம் செவிமடுக்க வேண்டும்.

மேற்கு உலக நாடுகளின் அரசுகளும், உக்ரைன் ஆட்சியாளர்களும் மின்ஸ்க் ஒப்பந்தத்தைக் காலில் இட்டு நசுக்குகிறார்கள். வரலாற்றின் மிக முக்கியமான இந்தத் தருணத்தில், டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகளை ரஷ்ய கூட்டமைப்பு அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்க நாம் மேற்கொண்டு வரும் முயற்சியை, கட்சிப் பாகுபாடின்றி, ரஷ்ய நாடாளுமன்றத்தில் அனைத்து தரப்பினரும் ஆதரிக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறோம்.

அழிவுகரமான வன்முறை வெறியாட்டங்களை இனி ஒருபோதும் பொறுத்துக் கொள்வது சாத்தியமில்லை. இரு குடியரசுகளின் நகரங்கள் மற்றும் ஊர்களைக் கைப்பற்றுவதை ரஷ்யா ஒருபோதும் அனுமதிக்காது. நேட்டோ அமைப்பின் ஆதரவுடன் பண்டேரா வெறியர் கூட்டம் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவிக்கும் அபாயத்தை நாம் புறக்கணிக்க முடியாது . "ஆயுதம் ஏந்துபவன் ஆயுதத்தாலேயே அழிவைத் தேடிக் கொள்கிறான்." என்ற பல நூற்றாண்டுகால ஞானத் திரட்டை போர் வெறியர்கள் தங்கள் நினைவில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

"போர் வேண்டாம்" என்று உறுதியாக, உரக்க முழக்கமிடும் காலம் வந்துவிட்டது.

தமிழில் - **அருண் அசோகன்**

# சங்கே முழங்கு!



## தலித் பக்தர்களை தாக்கும் தீட்சிதர்களை கைது செய்க!

# நடராஜர் திருக்கோயிலை அரசு ஏற்க சட்டம் நிறைவேற்றுக!

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்**



கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகரில் உள்ள தில்லை நடராசர் திருக்கோயில் தீட்சிதர்கள் பக்தர்களிடையே பாகுபாடு மற்றும் சாதி தீண்டாமை காட்டுவது தொடர்ந்து நீடித்து வருகிறது.

வரலாற்று தொன்மையும், திராவிடக் கட்டிடக்கலையின் பெருமையும் கொண்ட தில்லை நடராசர் திருக்கோயில் நிர்வாகத்தை, தமிழ்நாடு அரசு தனி சட்டம் இயற்றி, இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தின் கொண்டு வருவது காலத்தின் தேவையாகும்.

கடந்த 13.02.2022 சிதம்பரம் நடராசர் ஆலயத்திற்கு சென்ற பட்டியலின பெண் பக்கதர் ஜெயஷீலா என்பவரை, தீட்சிதர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தடுத்து, அவரது சாதியை குறிப்பிட்டு இழிவுபடுத்தி, அவமதிக்கப்பட்டுள்ளார். மேலும் கோவிலுக்கு உள்ளே நிற்க விடாமல் தள்ளி வெளியேற்றியுள்ளனர். இது தொடர்பாக பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் உட்பட பல்வேறு சட்டப் பிரிவுகளில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், குற்றச் செயலில் ஈடுபட்டவர்களை காவல்துறை இதுவரை கைது செய்யாமல் இருப்பது சரியல்ல, அவர்கள் அனைவரையும் உடனடியாக கைது செய்து, சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி விடாமல் தண்டனை பெறும் வகையில் வழக்கை நடத்த வேண்டும்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக சட்டம் நிறைவேற்றி, அதன்படி அர்ச்சகர்கள் நியமனம் செய்து, சமூகநீதி வழங்கியுள்ள தமிழ்நாடு அரசு, சிதம்பரம் நடராசர் கோயில் நிர்வாகத்தையும், அதன் உடைமைகளையும் கையகப்படுத்த தனி சிறப்புச் சட்டம் நிறைவேற்றி, அதன் முழு நிர்வாகத்தையும் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வர வேண்டும். இங்கு பணிபுரியும் தீட்சிதர்களுக்கு ஊதியம் நிர்ணயித்து வழங்கவும் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



என்.எஸ். பிரதாப் சந்திரன்




# போலி சாமியார்களும் - பெண்களும்

**மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என இவை மூன்றையும் முற்றாகத் துறந்தவர்கள்தான் சாமியார்கள் என்று சொல்வார்கள். ஆனால் இன்றைய சாமியார்கள் இவை மூன்றின் மீதும் அளவற்ற மோகம் கொண்டவர்களாகவே சாமியார்கள் வலம் வருகின்றனர்.**

எனவே, இவர்களிடத்தில் பெண்கள் மிகவும் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். ஆனால், பெண்கள் விளக்கு வெளிச்சத்தைத் தேடிப்போய் வீழ்ந்து மடியும் விட்டில் பூச்சிகளைப் போல் இந்த கள்ளச் சாமியார்களை நாடிப் போய் சீரழிகிறார்கள்.

கள்ளச் சாமியாரான நித்தியானந்தா இன்று எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை. அவர் திருவிளையாடல் புராண முருகனைப் போல் எனக்கென்று ஒரு நாடு, எனக்கென ஒரு மக்கள் என புருடா கைலாசாவைக் கட்டமைத்துள்ளதாகக் கூறுகிறார். இவரால் பாதிக்கப்பட்டவர்களின் கதி என்னவானது?

சுசில் ஹரி பள்ளியில் தாளாளர் சிவசங்கர பாபாவின் லீலைகள் சமீபத்தில் வெளியாகி பாப சிறைக்கு சென்றார். குரு ரஞ்சித் ரஹீம் சிங் கொலை, கற்பழிப்பு வழக்குகளில் ஆயுள் தண்டனை பெற்றுள்ளார். இதுபோன்ற எத்தனையோ போலி சாமியார்கள் பெண்களின் வாழ்க்கையைச் சீரழிப்பதோடு, நாட்டையும் சீரழிக்கத் துணிந்து விட்டனர்.

அதன் ஒரு பகுதி தான் இந்திய பங்கு சந்தையின் போக்குகளையே இமயமலையின் குகையில் இருந்தபடி யோகி சாமியார் தீர்மானிக்கிறார் என செபி குற்றம் சாட்டியுள்ளது. இப்படிப்பட்ட சாமியார்கள் பெண்ணாசையையும் துறக்கவில்லை, பொன் னாசையையும் துறக்கவில்லை. இவர்களை நம்பி பில்லி, சூனியம், மந்திரம், மாந்திரிகம், பரிகாரம் என பெண்கள் இவர்கள் பின்னால் செல்லலாமா?



ஆனால், இதுபோன்ற போலி சாமியார்கள் புற்றீசல் போல் புறப்பட்டு மக்களை மயக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நமது நெஞ்சைப் பதறச் செய்யும் கொடுமை திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தாமரைப்பாக்கம் கிராமத்தைச் சார்ந்த ராமகிருஷ்ணன் என்பவரின் மகள் ஹேமமாலினிக்கு நிகழ்ந் துள்ளது.

கூலி வேலை செய்யும் ராமகிருஷ்ணனுக்கு இரண்டு பெண்கள். இதில் மூத்த மகளான ஹேமமாலினி தனியார் கல்லூரியில் கணிப்பொறி அறிவியல் மூன்றாம் ஆண்டு படித்து வந்தார். கணிப்பொறி அறிவியலைப் படித்து விட்டு கழிசடை சாமியாரின் காலில் விழுந்து கிடக்கும் அவலம் ஏன்?

ஜேமமாலினிக்கு நாக தோஷம் உள்ளதாகக் கூறி அவருக்குப் பரிகாரம் செய்வதற்காக, திருவள்ளூர் பூண்டி அருகிலுள்ள வெள்ளாத்துக்கோட்டையில் உள்ள முனுசாமி என்ற சாமியாருக்கு சொந்தமான ஓடக்கரை ஆசிரமத்திற்கு தனது பெரியம்மாவுடன் சென்றுள்ளார்.

அன்று இரவு ஆசிரமத்திலேயே உணவு சாப்பிட்டு மாணவியும் அவரது உறவினர்களும் உறங்கியுள்ளனர். அனைவரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் ஹேமமாலினி திடீரென வாந்தி எடுத்து சோர்வடைந்த நிலையில் சாமியாரின் அறையிலிருந்து வெளியே ஓடிவந்துள்ளார்.

தன் காதில் சாமியார் விஷம் ஊற்றிவிட்டதாக கூறி ஹேமமாலினி மயங்கி விழுந்துள்ளார். அப்போதும் அவர்களிடத்தில் மாந்ரீகம் மூலம் மாணவியை காப்பாற்றுவதாக சாமியார் கூறியுள்ளார். இரண்டு மணி நேரம் அங்கேயே வைத்துக் கொண்டு மாணவியைக் காப்பாற்றிவிடுவதாகச் சாமியார் நாடகம் ஆடியுள்ளார். ஆனால் ஹேமமாலினி மோசமடைந்து மூர்ச்சையான பிறகே ஆட்டோவில் ஏற்றி வெங்கல் பகுதிக்கு சிகிச்சைக்காக அனுப்பியுள்னர்.

என்ன கொடுமை! அங்கு சிகிச்சை பலனின்றி அந்த மாணவி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்மந்தப்பட்ட சாமியார் ஏன் தலைமறைவாகி விட்டார்? குற்றமற்றவர் ஏன் ஓடி ஒளிய வேண்டும்? சம்மந்தப்பட்ட மாணவியின் செல்போனை சாமியார் மறைக்க முயன்றது ஏன்? போன்ற கேள்விகளும் எழுகின்றன.

இதே போன்ற ஒரு சம்பவம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தனியார் கிறிஸ்தவ பள்ளியில் படித்து வந்த அரியலூர் மாவட்டம் வடுகப்பாளையத்தைச் சேர்ந்த மாணவிக்கும் ஏற்பட்டுள்ளது. தங்கும் விடுதியில் இருந்த அந்த மாணவி திடீரென வாந்தியெடுத்துள்ளார். தகவல் அறிந்த மாணவியின் பெற்றோர் அவரை ஊருக்கு அழைத்துச் சென்றனர். அங்கும் தொடர்ந்து வயிற்றில் பிரச்சினை இருக்கவே அருகில் இருக்கும் மருத்துவமனையில் சேர்த்தனர். உடல்நிலை சரியாகாத நிலையில் அவரை விசாரித்த போதுதான் தான் பூச்சி மருந்தைக் குடித்துவிட்டதாகக் கூறினார். இதையடுத்து தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சை பலனின்றி அந்த மாணவி உயிரிழந்தார். இதையடுத்து இந்த விவகாரம் மிகப்பெரிய அளவில் உருவெடுத்தது. தஞ்சாவூரைச் சேர்ந்த விசுவ இந்து பரிசத், இந்து முன்னணி உள்ளிட்ட அமைப்புகளின் உள்ளூர் பிரமுகர்கள் தலையிட்டு மதமாற்றம் செய்ய முயற்சித்ததால்தான் மாணவி உயிரிழந்ததாக வழக்குப் பதிவு செய்து பள்ளிக்கூடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரினர்.

இவரை மதம் மாறச் சொல்லி பள்ளியில் கொடுத்த மன அழுத்தத்தால் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டினார். அந்த மாணவி பேசும் வீடியோ காட்சியைத் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். ஆனால் இதனை விசாரித்த மாவட்ட கண்காணிப்பாளர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “சிகிச்சையில் இருந்த அந்த மாணவியிடம் மருத்துவர்களின் அனுமதியுடன் மாஜிஸ்ரேட் வாக்குமூலம் பெற்றார். அந்த வாக்குமூலத்தில் மதமாற்றம் தொடர்பாக அந்த மாணவி எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை. அதுபோல அவரது பெற்றோரும் தெரிவிக்கவில்லை” என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் அந்த மாணவி சிசிக்சையில் இருப்பது போலவும், அவர் பேசுவது போலவும் சமூக வலைதளங்களில் வீடியோ பரப்பப்பட்டு வருகிறது. “இது சிறார் சட்டப்படி குற்றம். இதை எடுத்தது, பரப்பியது யார்? என்பது குறித்து மருத்துவக் கல்லூரி காவல் நிலையத்தினர் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்” எனவும் காவல்துறை கண்காணிப்பாளர் கூறியுள்ளார். இரண்டு சம்பவங்கள் இரண்டு மாணவிகள் சம்மந்தப்பட்டு பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

**கிறிஸ்துவ மிஷினரி சம்மந்தப்பட்ட பள்ளி மாணவி மரணத்தில் வானத்திற்கும் பூமிக்கும் குதித்த பாஜகவும், சங்பரிவார் கும்பலும், இந்து சாமியார் ஆசிரமத்தில் உயிரிழந்த மாணவியின் மரணத்தில் உண்மையை வெளிக்கொண்டு வர முயற்சி செய்யாதது ஏன்? லாவண்யாவுக்கு ஒரு நீதி, ஹேமமாலினிக்கு ஒரு நீதியா? இந்து சாமியார் என்றால் சட்டத்திற்கு அப்பாற்பட்டவரா? என்ற கேள்வி எழுகிறது.**

நமது பாரத பிரதமர் ஃபேட்டி பச்சாவே ஃபேட்டி பதாவே, அதாவது பெண் குழந்தைகளை படிக்க வைப்போம், பெண் குழந்தைகளை பாதுகாப்போம் என்றார். இவர்கள் பெண் குழந்தைகளை பாதுகாக்கும் லட்சணம் இதுதானா? போலி சாமியார்களிடமிருந்து பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம்.

தொடர்புக்கு: **93826 79798**

## எதிர்கட்சி உறுப்பினர் இல்லாத சின்னாளபட்டி பேரூராட்சி

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளப்பட்டி பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் 17 வார்டுகளில் திமுகவும், இதில் 4வது வார்டில் மட்டும் சுயேட்சை வெற்றி பெற்றுள்ளார்.

முதல் முறையாக எதிர்க்கட்சி உறுப்பினர் இல்லாத சின்னாளபட்டி பேரூராட்சி மன்றம் அமைகிறது.



-ஆர்.கே.

## இன்றைய தினம் நாடு எதிர்கொண்டிருக்கும் பாசிச மதவெறி அரசியல் என்பது மிக மிக ஆபத்தானது. பாம்பின் விஷத்தை விட பன்மடங்கு கொடியது.

ஆர்.எஸ்.எஸ்... அதன் அரசியல் அங்கமான பி.ஜே.பி. இப்போது கையில் எடுத்திருக்கிற ஆபத்தான, தேசத்தின் மக்கள் ஒற்றுமைக்கு எதிரான ஒரு ஆயுதம் தான் மதம். மதம் என்ற பெயர் தாங்கிய மதவெறி அரசியல். இது உடனடியாக அடியோடு அழிக்கப் படவேண்டிய ஒன்று என்பதை நாம் அறிய வேண்டும். மக்களிடையே அவர்கள் அறியும் வகையில் இந்த ஆபத்தை எடுத்துச் செல்வதும், சொல்வதும் அவசரக் கடமையாக நம் முன்னே பெரும் பூதாகரமான சவாலாக இன்று அது நிற்கிறது . மதவெறியை அதன் ஆபத்தை பாமர மக்கள் அறியாத வகையில் மறைத்து விதைக்கும் நாசகார செயலை நாடு தழுவிய அளவில் பாசிச பிஜேபி மிக வேகமாக திட்டமிட்டு செய்து கொண்டிருக்கிறது.

மதச்சார்பின்மையை விரும்புகிற பெரும்பகுதி மக்களில் ஒரு பகுதியினர் இன்று சற்று மாறி பேசும் நிலை உருவாகி இருக்கிறது. இஸ்லாமியர்களுக்கு அதிகம் இடம் கொடுக்கக் கூடாது என்றும் கிறிஸ்தவர்கள் செய்யும் மதமாற்றம் தடுக்கப் படவேண்டும் என்றும், அது நியாயம்தானே என்றும் பேசுகிற அளவிற்கு அவர்களது உள்ளத்தில் இந்துமத வெறி அதாவது இந்து மதத்தின் மீதான இறுக்கம் சங்கிகளால் முறுக்கேற்றி விடப்பட்டிருக்கிறது. இந்த ஒரே வேலையைத் தான் இந்துத்துவா காவி மய பிஜேபி மிகத் திறமையாக செய்து வருகிறது. அதனைக் கையில் எடுத்துக் கொண்டு தனக்கான ஆர்எஸ்எஸ் அரசியலையும் செய்துவருகிறது.

### ஆபத்து உணர்வோம்

நமது நாட்டில் அரசியல் தெளிவற்ற மக்கள் எண்ணிக்கையே பெரும்பகுதி. சாதரணமாக அனைத்து மக்களிடமும் அவர்கள் மதம் சார்ந்த பற்று என்பது கொஞ்சம் கண்டிப்பாக இருக்கும் என்பது சகஜமே. அவர்களுக்கு என்ன தெரியாது என்றால் இது மேல் சாதீய பார்ப்பனீயத்தின் சூழ்ச்சி என்பது தெரியாது. இந்து மதம் என உயர்த்திப்பேசும் இந்த மதவெறியர்கள் இந்து மதத்திற்குள் எல்லா சாதியினரையும் ஏன் ஏற்றத்தாழ்வின்றி ஒன்றாக நடத்தவில்லை என்பது தெரியாது.

**இந்து மதம் என்றால் ஒன்றுதானே! அதற்குள் ஏன் ஏற்றத்தாழ்வு என்பது தெரியாது. நாம் எல்லோரும் இந்து என்ற பின் இந்து மதத்திற்குள் சாதி மறுப்பு திருமணங்களை ஏன் ஏற்காது கொலை செய்யும் வரை போகிறார்கள் என்பது தெரியாது! வீட்டின் படுக்கை அறையில்**

**நாயுடன் உறங்கும் இந்த இந்துத்வாவாதிகள் ஏன் அதே இந்து மதத்தைச் சேர்ந்த கீழ் சாதியினரை வீட்டிற்குள் நுழைய விட மறுக்கிறார்கள் என்பது தெரியாது!**

உயிர் பிழைக்க இரத்தம் வேண்டுமெனில் இந்து மத இரத்தமே வேண்டும்! இரத்த வங்கியில் இஸ்லாம், கிறித்தவர்கள் தானம் செய்த இரத்தம் கலந்து இருக்கும்! அது வேண்டாம்! பரவாயில்லை நான் இரத்தமின்றி சாகிறேன் என்று எந்த இந்துத்வா சங்கிகளும் சாமியார்களும் சொல்வதில்லையே! ஏன் அங்கு மட்டும் விலக்கு! என்பது இவர்களுக்கு தெரியாது! இப்படி இதெல்லாம் தெரியாத இந்த அப்பாவி மக்களிடம் தெரிந்தோ தெரியாமலோ இந்து மதம் குறித்த நூலிழை மத விசுவாசம் இருக்கத்தான் செய்யும். .

இந்த நூலிழை சந்தினை அடையாளம் கண்டு கண்களுக்குக் கூட புலப்படாத அந்த சிறு ஓட்டையின் வழியே இந்துத்வா மத வெறி ஆலால விஷப் பாம்பு மக்கள் மனதின் உள்ளே நுழைந்து விடுகிறது. மதவெறியற்ற, மதத்தின் மீது இம்மியளவு பற்று மட்டுமே கொண்ட மக்களின் மனதில் மதவெறி பாசிச விஷப் பாம்பு நுழைந்து மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இன்று வரை குடும்ப உறவோடு பழகி வந்த இஸ்லாமிய, கிறித்தவ சகோதர மக்களிடமிருந்து வேறுபடும் மன ஓட்டத்தை ஏற்படுத்துகிறது. என்ன இருந்தாலும் அவர்கள் வேறு நாம் வேறு என்கிற எண்ண உணர்வுகளைத் தூண்டி விடுகிறது.

இதனை எதிர்த்து வாய் வீச்சு உரைகளோ, ஹிஜாப் அணிவது அவர்கள் உரிமை என்ற ஒற்றை வரி முழக்கமோ, மதம் மாற்றுகிறார்கள் என்றால் கிருஸ்துவ பள்ளிகளில் ஏன் படிக்க வேண்டும் என்ற மறுப்பு வாத பேச்சோ நிலைமையை சரியாக்கிவிடும் என நாம் நினைத்தால் அது முற்றிலும் தவறு. பலனற்றதாகவே முடியும். அதுபோல் இந்து மதத்தினர் சிலர் அணியும் சில குறியீடுகளைச் சொல்லி இது நியாயம் எனில் அவர்கள் தங்கள் மத அடையாளங்களை அணிவதும் நியாயம் தானே! என்ற தர்க்க வாதமோ எந்த பலனையும் தராது என்பது மட்டுமல்ல மாறாக இந்துத்வா சங்கிகளின் பொய்யுரைகளுக்கு துணை செய்யும் விதத்தில் தான் கொண்டு விடும்.

### நமது அணுகுமுறை

ஆட்சி நிர்வாகத்தில் முற்றிலுமாக தோற்றுவிட்ட பி.ஜே.பி., நாட்டின் பொதுத் துறைகளை எல்லாம் விலைபேசும் பி.ஜே.பி, ஜனநாயகத்தின் குரல்வளையை நெறித்து கொலை செய் யும் பி.ஜே.பி, கார்ப்பரேட் அதானி அம்பானிகளுக்கு அடிமையாகிவிட்ட பி.ஜே.பி. , நாட்டையும் நாட்டு மக்களின் வாழ்க்கையையும் நாசமாக்கி விட்ட பி.ஜே.பி. அவை பற்றி எல்லாம் சிறிதும் எள்ளளவும் கவலைப் படாது தனது மாபாதக தேச விரோத செயல்களை மறைத்து அரசியல் களத்தில் தலை உயர்த்தி நிற்பதற்கு ஒரே காரணம் அது கையிலெடுத்திருக்கிற மதவெறி கொண்ட மதவாதம் தான்.

அதை மிகவும் லாவகமாக தூண்டிவிட்டு அதில் அரசியல் அறுவடை என்பதே இன்று ஆர் எஸ் எஸ் பி.ஜே.பி.கூட்டத்தின் மிகப் பெரிய ஆயுதம்.

அவர்களை பிஜேபி என்றோ, வலதுசாரிகள் என்றோ முத்திரை குத்திவிட முடியாது. அவர்கள் அப்படிப்பட்டவர்களும் அல்ல. மதத்தின் மீதான இனம் புரியாத பாசம் அவர்களை



>> 1ம் பக்கத் தொடர்ச்சி

நற்சான்றுதான் இந்த மாபெரும் வெற்றி. என்னைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் திராவிட மாடல் ஆட்சிக்கு மக்கள் கொடுத்திருக்கும் அங்கீகாரம் இது. இதைத்தான் நன்றாகக் கவனிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை அமைத்தால், ‘‘மக்களுக்கு நன்மை செய்யும், கொடுத்த வாக்குறுதியை நிச்சயமாக, உறுதியாகக் காப்பாற்றுவார்கள்’’ என மக்கள் வாக்களித்தார்கள். அந்த நம்பிக்கையை இந்த 9 மாத காலத்தில் நாங்கள் முழுமையாக காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம்.

### சாதனைகளை திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றிடுவோம்!

மக்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை எப்போதும் நாங்கள் காப்பாற்றத் தயாராக இருக்கிறோம். எத்தனையோ நல்ல திட்டங்களை, வரலாற்றில் பதிவாகக் கூடிய சாதனைகளை அடுத்தடுத்து நாம் செய்துகொண்டிருக்கிறோம், இன்னும் செய்யப்போகிறோம். இது, தமிழ்நாட்டு மக்களுக்கு முழுமையாக; அதாவது, 100 விழுக்காடு அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், உள்ளாட்சி நிர்வாகத்திலும் 100 விழுக்காடு நாம் இருக்க வேண்டும், நம்முடைய கூட்டணி இருக்கவேண்டும் என்கிற அந்த விருப்பத்தைத் தான்தொடர்ந்து நான் பரப்புரையில் எடுத்துச் சொன்னேன். ஸ்டாலின் ரொம்ப பேராசைப்படுகிறான் என்று நீங்கள் நினைக்கக் கூடாது.`நீங்கள் அடைவது பேராசையல்ல, உங்கள் உரிமைதான்’ என மக்கள் தங்களுடைய வாக்குகள் மூலமாக அதை இந்தத் தேர்தல் மூலமாக செய்து காட்டியிருக்கிறீர்கள். இந்த வெற்றியைக் கண்டு, உறுதியாகச் சொல்கிறேன், நான்கர்வம் கொள்ளவில்லை. மக்கள் நம் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நாம் காப்பாற்ற வேண்டும் என்ற அந்த உறுதிதான் இன்றைக்கு எனக்கு வந்திருக்கிறது.

### தி.மு.கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணியின் வெற்றி!

அந்த வகையில் என்னுடைய பொறுப்புகளை உணர்ந்து, நம்முடைய அரசின் சார்பில் அவைகள் எல்லாம் நிச்சயமாக நிறைவேற்றப்படும். இந்த வெற்றிக்கு முழு காரணம், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்துள்ள மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிதான். இதுதேர்தல் உறவாக மட்டுமல்ல, கொள்கை அளவிலான உறவாக இருக்கின்ற காரணத்தால் தான், இந்த வெற்றி நமக்குக் கிடைத்திருக்கிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல், அதைத் தொடர்ந்து சட்டமன்றத் தேர்தல், கிராமப்புற உள்ளாட்சித் தேர்தல், இந்தத் தேர்தலில் இந்தக் கூட்டணி அமைந்து, பல வெற்றிகளை நாம் கண்டிருக்கிறோம். அதேபோல, கூட்டணிக் கட்சித் தலைவர்களுடைய ஒத்துழைப்பும், அவர்களுடைய பரப்புரையும்தான் இந்த வெற்றிக்கான காரணங்களில் ஒன்று.

### மக்கள் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் உண்மையாக உழைக்க வேண்டும்!

இன்னொன்று, என்னுடைய பணிவான உரிமை கலந்த ஒரு வேண்டுகோள். இந்தவெற்றியை ஆடம்பரமாக நீங்கள் கொண்டாடாமல், அமைதியாகக் கொண்டாட வேண்டும். மக்கள் நம் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும், மக்களுக்கு நீங்கள் உண்மையாக இருக்க வேண்டும், உண்மையாக உழைக்க வேண்டும், பாடுபட வேண்டும். மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டும். உங்கள் மீது எந்தப் புகாரும் வராத வகையில் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். அதை நான் தொடர்ந்து நிச்சயமாக, உறுதியாக கண்காணித்துக் கொண்டே இருப்பேன். அது யாராக இருந்தாலும், அதற்குரிய நடவடிக்கையை நிச்சயம்நான் எடுப்பேன், அதற்குத் தயங்க மாட்டேன். எனவே, இவ்வளவு பெரிய வெற்றியைத் தந்திருக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கு மீண்டும் ஒருமுறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்த அரசின் மக்கள் பணியைப் பார்த்து கொங்கு மண்டலமே முழு வெற்றியடைந்திருக்கிறது!

எங்களுக்கு வாக்களிக்கத் தவறியவர்கள், இவர்களுக்கு நாம் ஓட்டுப் போடாமல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்பட வேண்டும். அந்த அளவுக்கு எங்களுடைய பணி இருக்கும்’’ என்று சொன்னேன், உறுதி எடுத்துக் கொண்டோம். அதைத் தான், ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து 9 மாத காலமாக நான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறேன். அதனால் தான், இவ்வளவு பெரிய வெற்றியை, அ.தி.மு.க.வின் கோட்டை என்று சொல்லக்கூடிய கொங்கு மண்டலத்தையே இன்றைக்கு நாம் கைப்பற்றியிருக்கிறோம்.

இவ்வாறு கூறினார்.



**தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக உருவெடுக்கும்போதுதான் சோசலிச லட்சியம் என்பது உருவாகிறது, சோசலிசம் என்பது ஒரு சக்தியாக மாறுகிறது.**

**– ஏங்கல்ஸ்**



அப்படிப் பேச வைக்கிறது. இது தான் ஆர் எஸ் எஸ் கும்பலின் மூலதனம்.

மதம் அபினை விட மோசமானது என்ற சொல் நூற்றுக்கு நூறு நிதர்சன உண்மையாகி தலை தூக்கி ஆடுகிறது.

இந்த ஆபத்தை மதச்சார்பற்ற சக்திகள் புரிந்து கொள்வதும், பிறகு அனைவரும் ஒருங்கிணைந்து மிக நிதானமாக மக்களை அணுக வேண்டியதும் மிக மிக அவசியமாகிறது. மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் துயரங்களை துன்பங்களை மதவெறி மை பூசி மறக்கடிப்பதற்கான, மக்களைப் பிளவு படுத்துவதற்கான, திசை திருப்பும் மாய முயற்சியே மதவெறி தூண்டல் என்பதை மக்களிடையே நிதானமாக எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாய பெரும் பொறுப்பு மதச்சார்பற்ற சக்திகளின் முன்பு இன்று தலை தூக்கி நிற்கிறது. இது தனித்த செயல்பாடாக இருக்க முடியாது. மதவாத சக்திகளை தோற்கடிப்பதற்கான ஒன்று பட்ட செயல்பாட்டின் மூலமே சாத்தியம். எனவே ஒருங்கிணைந்த செயல்பாடு தேவைப்படுகிறது.

மக்களது வறுமை, அவர்களது வாழ்க்கையின் அனைத்துவகை துன்பங்கள், நாட்டின் பொதுச் சொத்துக்கள் அனைத்தும் கார்ப்பரேட்டுகளுக்கு கைமாற்றல் போன்ற அனைத்து மக்கள் விரோத, தேச விரோத செயல்களை மூடி மறைத்து பாமர மக்களை ஏமாற்றும் வெல்லம் தடவிய விஷமே மதவெறி என்பதை சாதாரண மக்களிடம் எடுத்துச் சொல்லிப் புரிய வைக்க வேண்டும். இந்த மிகப் பெரிய உடனடிக் கடமையை மதச்சார்பின்மை மீது நம்பிக்கை கொண்ட தேச பக்த சக்திகள் தான் உடனடியாக செய்து முடிக்க வேண்டும். அதேபோல்

**பாசிசத்திற்கு எதிரான அத்தனை அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் ஒருங்கிணைப்பு என்பதை வாயளவில் பேசிவிட்டு தங்களது தனித்தன்மை, தனி அடையாளம் என்பதே முக்கியம் என்ற நிலையில் இருந்து உடனடியாக விடுபடவேண்டிய நேரமும் வந்துவிட்டது. இது பெரிது அது சிறிது என்ற வாதங்களை புறந்தள்ளி ஒருமித்து நின்று ஒரு அரசியல் மகா கூட்டணியாக எஃகு போன்ற உறுதியோடு செயல் பட வேண்டியதே உடனடிக் கட்டாயம் என்பதை உணர்ந்து ஏற்றுக் கொண்டேயாக வேண்டிய நிலை. எவர் தலைமை, நீயா நானா என்பது போன்ற பேச்சுக்கே இடமில்லாமல் அவை மறந்தால் மட்டுமே பாசிசம் எனும் வேரூன்றி வரும் விஷ விருடசத்தை வேரோடு மண்ணாக வீழ்த்த முடியும்.**

இன்று நாட்டையும், நாட்டு மக்களின் நலன்களையும் காப்பது மட்டுமின்றி நாட்டையே பாசிச அழிவுப் பாதையிலிருந்து, ஆர்எஸ்எஸ் இந்துத்வா மதவெறி கும்பலிடமிருந்து காப்பாற்றியாக வேண்டிய அவசியம் உள்ளது . இதனைச் செய்து முடிக்க வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது என்ற ஒற்றை நிலை உறுதி பூண்டு ஜனநாயக சக்திகள் செயல்பட வேண்டும்.

இடதுசாரிகளின் பங்கு இந்த வேள்வியில் மிக முக்கியமானது. இந்த பாசிசத்திற்கு எதிரான போரில் மற்ற உடன் படும் சக்திகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கொண்டு செயல்படுவது மிக முக்கியமானது என்ற பாதையில் திட்டமிடவேண்டும். இந்த தேசத்தை பாசிச வளையிலிருந்து காத்திட வேண்டும் என்ற ஒற்றைக்கடமை தவிர வேறெதுவும் நம்முன் இப்போது இருக்கவே முடியாது. இதுதான் இன்றைய போர்த் தந்திரமும், தாரக மந்திரமும் கூட. அன்று வெள்ளையனை விரட்ட நமக்குள் இருந்த வித்தியாசங்களை விரட்டி புறந்தள்ளி ஒன்று பட்டு நின்றோம். அதுபோல் இன்றும் ஒன்றுபட்டு பாசிசத்திற்கு எதிராக, அதனை அடியோடு அழிக்க ஒன்றுபட்டுப் போராட வேண்டிய கட்டாய சூழல்.

**வேற்றுமையில் ஒற்றுமை:**

நம் ஒவ்வொரு அரசியல் கட்சிக்குள்ளும் வேறுபாடுகள் உண்டு. அதனால் தான் தனித்தனி அரசியல் கட்சிகளாக செயல் படுகிறோம்!

ஆனால் நமக்குள் உள்ள வேறுபாடுகள், போட்டிகள் எல்லாம் அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை எப்படி முன்னேற்றுவது என்பதற்கானதே!

நாட்டின் ஒருமைப் பாட்டையும், ஜனநாயக மரபு களையும், மதச்சார்பின்மையையும், மாநிலங்களின் உரிமைகளையும், மாநில மக்களின் பன்முகக் கலாச் சாரத்தையும் காப்பதற்கும், மேம்படுத்து வதற்குமான கொள்கைநிலை பற்றியதே!

ஆனால் பாசிச சித்தாந்தம் இதற்கு நேர் எதிரானது. மக்களின் நலன்களுக்கும் தேசத்தின் நலன்களுக்கும் எதிரானது.

மதவெறி தூண்டல் மூலம் மக்களைப் பிரித்தாளும் கொள்கை பற்றியது.

சிறுபான்மை மக்களுக்கு எதிரானது. கார்ப்பரேட் டுகளின் நலம் சார்ந்த கொள்கை உடையது.

ஒற்றைத் தலைமை, ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்ற வழியில் நாட்டின் நிலையான ஜனநாயக மார்புகளுக்கு வேட்டு வைக்கும் தன்மை கொண்டது.

பாசிச ஆபத்ததை நாம் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது.

நாட்டு மக்களிடையே எடுத்துச் சொல்லி தெளிவு படுத்த வேண்டும்.

நாளை என்று காத்திருப்பதற்கோ, நடக்கும் என்று அசந்தி ருப்பதற்கோ நேரமேயில்லை.

இனியும் தாமதிக்காது எல்லோருமாக இணைந்து முனைந்து செயல்பட வேண்டிய கட்டாயம் கண் முன் நிற்கிறது!

களமிறங்கிப் போராடி நாசாகாரப் பிடியிலிருந்து நாடு காத்திட வேண்டும்! இதற்கான பாதையில் மக்களை அணி திரட்ட வேண்டும்!

செய் அல்லது செத்து மடி என்ற முழக்கத்தை முன்னிறுத்தி நாம் ஒன்று கூடிச் செய்வோம்!

பாசிசம் செத்து மடியச் செய்வோம்!

தொடர்புக்கு: **94449 56694**

# தோழர் தா.பா.வின் ஆளுமை



## பிப். 26

## தோழர் தா.பாண்டியன் முதலாமாண்டு நினைவு நாள்


தோழர் தா.பாண்டியன் தனது இறுதி மூச்சு வரையிலும் உடலாலும், உள்ளத்தாலும் சுறுசுறுப்பாக செயல்பட்டு வந்தார். அவரது மேடை முழக்கம் கேட்போர் அனைவரையும் சுண்டி இழுக்கும். இலங்கை அரசின் தமிழினப் படுகொலையை கண்டித்து எல்லா அரசியல் கட்சிகளையும் இணைத்து பேரியக்கமாக திரட்டுவதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பெரும் பங்காற்றியது. இதில் அப்போது மாநில செயலாளராக இருந்த தா.பா.வின் ஆளுமை வெளிப்பட்டது.

**– இரா.நல்லகண்ணு**

**அதிக ஓட்டு வித்தியாசத்தில்**

## 137வது வார்டு தி.மு.க. வேட்பாளர் தனசேகரன் வெற்றி

சென்னை மாநகராட்சி தேர்தலில் கோடம்பாக்கம் மண்டலத்துக்கு உட்பட்ட 137வது வார்டில் திமுக வேட்பாளராக அக்கட்சியின் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.கே.நகர் தனசேகரன் போட்டியிட்டார். அவர் இந்தத் தேர்தலில் 15 ஆயிரத்து 568 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். இது குறித்து அவர் கூறுகையில், 'தமிழ்நாட்டில் மாநகராட்சி உறுப் பினர்களில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் என்ற சாதனையை நான் படைத்துள்ளேன். மற்ற வேட்பாளர்கள் அனைவரும் டெபாசிட் தொகையை இழந்துள்ளனர்' என்று தெரிவித்தார்.



**மனிதன் சிந்தனை அல்லது உணர்வு என்பது வாழ்நிலையை தீர்மானிப்பது இல்லை. மாறாக மனிதனின் சமுதாய வாழ்நிலைதான் மனிதனது சிந்தனை அல்லது உணர்வுகளை தீர்மானிக்கிறது.**

**- மார்க்ஸ்**



-அனில் ரஜீம்வாலே

# தலைசிறந்த நாடாளுமன்ற ஆளுமை, கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் கட்டியவர்

# பூபேஷ் குப்தா



**பூபேஷ் குப்தா இந்திய நாடாளுமன்றத்தின் 'புயல் கடற்பறவை', கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அரிய ஒளிரும் நட்சத்திரம், ஆகச் சிறந்த சொற்பொழிவாளர். கிழக்கு வங்கத்தின் (தற்போதைய பங்களாதேஷ்) மைமென்சிங் மாவட்ட இட்னா என்ற ஊரில் 1914 அக்டோபர் 20ம் நாள் பிறந்தார். அவருடைய தந்தை ஸ்ரீ மகேஷ் சந்திர குப்தா பணக்கார பெருநிலக்கிழார். செல்வம்மிக்க குடும்பத்தில் பிறந்தாலும் அது குறித்து அக்கறைப்படாது 16 வயதிலேயே தேசிய இயக்கத்தில் குதித்தவர்.**

இளமையில் படிக்கும் காலம் முழுமையும் பூபேஷ் புத்திசாலி மாணவராகக் கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைந்த ஸ்காட்டிஷ் சர்ச் காலேஜ் மற்றும் லண்டன் யுனிவர்சிட்டி காலேஜில் கல்வி கற்றார். தனது எஃப்.ஏ., மற்றும் பி.ஏ., தேர்வுகளைப் பெஹ்ராம்பூர் தடுப்பு முகாமிலிருந்து சிறப்புத் தகுதியுடன் தேர்வானார்.

புரட்சிகர இயக்கங்களிலும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும்

விரைவில் பூபேஷ் தேசியப் புரட்சியாளர்களின் மேஜிக் வட்டத்திற்குள் ஈர்க்கப்பட்டு சுரேந்திர மோகன் ஹோஷ் தலைமையிலான அனுஷீலன் (ஆயுதப்) புரட்சிக் குழுவில் சேர்ந்தார். ஒத்துழையாமை இயக்கத்திலும் தீவிரமாகப் பங்கேற்றார். 1930, 31 மற்றும் 1933ம் ஆண்டுகளில் பலமுறை கைதாகி 1937வரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அப்போதுதான் அவருக்கு மார்க்ஸியத் தத்துவக் கோட்பாடுகளுடன் அறிமுகம் ஏற்பட்டது.

அவருடைய தந்தையோ அரசியலிலிருந்து அவர் விலகியிருக்க விரும்பினார். எனவே மேல் படிப்புக்காகப் பூபேஷை இங்கிலாந்து அனுப்பும்படி அரசுக்குக் கடிதம் எழுதினார்; அரசும் அதனை ஏற்க பூபேஷ் சட்டம் படிக்க இங்கிலாந்து சென்றார்.

இங்கிலாந்தில் அவருக்குக் கிரேட் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி (CPGB) மற்றும் மாணவர் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட கம்யூனிஸ்டாக மாறினார். இந்தியக் கம்யூனிஸ்ட்கள் உள்பட மிகப் பெரும் எண்ணிக்கையிலான கம்யூனிஸ்ட்களை அங்கே அவர் சந்தித்தார். 1941ல் இந்தியா திரும்பிய பூபேஷ் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியராகத் தன்னை அர்ப்பணித்தார். தொடக்கத்தில் சிபிஐ தலைமறைவுத் தலைமையகத்தில் பணியாற்றினார்.

கட்சிக்குப் பெரும் சேதத்தை விளைவித்த 1948 50களில் பிடிஆர்இன் இடதுசாரி குழுவாதச் சாகசப் போக்கு பாதையின்போது பூபேஷ் தலைமறைவாகச் சென்றார்.

1947ல் சிபிஐயின் மேற்கு வங்க மாகாணக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1951ல் கட்சி வங்காளமொழி தினசரியான 'ஸ்வாதின்தா' (சுதந்திரம்) ஆசிரியர் குழுவின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். அரசு சிபிஐ கட்சியைச் சட்டவிரோதம் என அறிவித்ததால் 1951ல் கைது செய்யப்பட்ட அவர் 1952 ஏப்ரல் வரை சிறையில் இருந்தார்.

தேர்தலில் போட்டியிடுவது எனக் கட்சி முடிவெடுத்த பிறகு மாநிலங்கள் அவைக்கு அவர் 1952ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போதிலிருந்து அவர் மறையும்வரை நீண்டகாலம் அந்த அவையின் உறுப்பினராக அவர் சேவையாற்றினார். 1977 ஜூன் 22 அன்று மக்களவையின் வெள்ளிவிழா மற்றும் அந்த அவையின் 100வது கூட்டத் தொடரில் பூபேஷ் குப்தா தனித்துவமாகப் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டார்.

**கட்சியில் வகித்த பொறுப்புகள்**

1953 – 54ல் மதுரையில் நடைபெற்ற மூன்றாவது கட்சி காங்கிரசில் பூபேஷ் குப்தா சிபிஐ மத்திய குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1956 பாலகாட் காங்கிரசில் முதன் முறையாக அவர் பொலிட்பீரோவுக்குத் தேர்வானார். 1958 அமிர்தசரஸ் மாநாட்டில் கட்சி அமைப்பு மாற்றியமைக்கப்பட்ட பிறகு மத்திய செயலகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பூபேஷ் 1981ல் அவர் மறையும்வரை அப்பொறுப்பை வகித்தார்.

1954 முதல் 1957 வரையிலும் மற்றும் 1966லிருந்து 1981 வரை கட்சியின் 'நியூஏஜ்' இதழின் ஆசிரியராக இருந்தார். குறிப்பாக ஞாயிற்றுகிழமைகளில் நியூஏஜ் இதழுக்கான அவரது தலையங்கங்கள் மற்றும் கட்டுரைகளை எழுதினார்.

1981 ஜூலையில் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி தீர்மானத்தின் மீது மாஸ்கோவிலிருந்து அவர் எழுதிய கட்டுரை, இறுதிக் கட்டுரையானது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி (CHC) யிடமிருந்து மாவோயிசத் தத்துவார்த்த மற்றும் அரசியல் தாக்குதல் நடைபெற்ற நாட்களிலும் அதைத் தொடர்ந்து 1964ல் சிபிஐ கட்சி பிளவின்போதும் பூபேஷ் குப்தா பிளவைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்த ஆகச் சிறந்த முயற்சிகளைச் செய்தார்; பிளவிற்குப் பிறகும் மீண்டும் ஒன்றுபடுவதற்கானத் தீர்வுகளைக் கொண்டுவர முயன்றார். ஆனால் அவரது முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

**உலகக் கம்யூனிஸ்ட் இயக்கம்**

பூபேஷ் குப்தா மிக உறுதியான சர்வதேசியவாதி மற்றும் இனஒதுக்கல் எதிர்த்துத் தளர்வின்றிப் போர்புரிந்த போராளி. 1957ல் புகாரெஸ்ட் நகரில் சர்வதேச கம்யூனிஸ்ட் மாநாட்டுக்கான தயாரிப்பு கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் 1957, 1960 மற்றும் 1969 மாநாடுகளில் சிபிஐ பிரதிநிதிகள் குழு உறுப்பிராக அவர் பங்கேற்றார். சிபிஐ பொதுச் செயலாளர் அஜாய் கோஷ் தலைமையில் 1959ல் பீக்கிங் சென்ற சிபிஐ பிரதிநிதிகள் குழுவிலும் இடம் பெற்று மா சே துங் அவர்களைச் சந்தித்தார். உலக சமாதானக் கவுன்சிலில் பூபேஷ் குப்தா தீவிரமாக ஈடுபட்டார். உண்மையில், அவர் இறுதியாகக் கலந்து கொண்டது 1981 டெமாஸ்கஸ் நகரில் சிரியா மற்றும் பாலஸ்தீன விடுதலை அமைப்புடன் (றிலிளி) ஒருமைப்பாட்டிற்கான சர்வதேச மாநாட்டில்தான்.

**சீன ஆக்கிரமிப்புக்குக் கண்டனம்**

தேசபக்தியின் ஆகச் சிறந்த வடிவம் கம்யூனிசம் என்பதைப் பூபேஷ்'தா எடுத்துக் காட்டினார். 1962ல் சீன ஆக்கிரமிப்பின்போது ராஜ்யசபாவில் இந்தியப் பாதுகாப்பு மசோதா குறித்த விவாதத்தில் பங்கேற்று அவர் ஆற்றிய உரை கொழுந்து விட்டு எரியும் அவரது தேசபக்த உணர்வுக்கு மிகச் சிறந்த நிரூபணம். "இந்நாட்டின் பாதுகாப்பை எதிர்க்கும் அல்லது நிகழ்ந்துள்ள ஆக்கிரமிப்புக்குப் பரிவுகாட்டும் எந்தவொரு தொழிற்சங்கத் தலைவர் அல்லது கம்யூனிஸ்டையும் நான் அறியேன் என இம்மாமன்றத்திலிருந்து நான் பிரகடனம் செய்கிறேன். அப்படி யாரேனும் இருந்தால்ஞ் தீர்மானத்திற்கும் நாட்டின் தேசபக்த நிலைக்கும் எதிராகச் சென்றால்ஞ் அப்படிப்பட்ட நபரின் செயல் ஏற்கமுடியாத ஒன்று, அவர் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இயக்கத்திலிருந்து தன்னையே வெளியே நிறுத்திக் கொள்கிறார்ஞ்" என்று உறுதிபட அவர் பிரகடனம் செய்தார்.

தேசபக்தி மற்றும் பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தின் மார்க்சிய அடிப்படையிலான ஒருமைப்பாட்டின் அடையாளமாக அவர் விளங்கினார்.

**பெண்களுக்காகப் பாடுபட்டவர்**

1975ல் சர்வதேசப் பெண்கள் ஆண்டு தொடங்கியபோது நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உணர்ச்சி பொங்கும் உரையில் அவர் அரசைப் பார்த்து, "பெரும் எண்ணிக்கையிலான பெண்களின் சமூக அந்தஸ்தையும் வாழ்வியல் நிலைமையையும் முன்னேற்ற ஆக்கபூர்வமான உறுதியான நடவடிக்கைகள் எடுங்கள், கொண்டாட்டங்களில் மட்டும் மூழ்கிவிடாதீர்கள்" என இடித்துரைத்தார். அந்த உரையில் அவர், "பெண்களின் விடுதலை என்பது சமூகத்தின் ஒரு குழுவின் விடுதலை அல்ல. முக்கியமாக அது பெண்குலத்தின் விடுதலை பிரச்சனை ஞ் அதுவே அடித்தளமானது என்பதால் இறுதியில் நமது ஒட்டுமொத்தச் சமூக வாழ்வின் விடுதலை பிரச்சனையுமாகும்!" என மேலும் தெரிவித்தார்.

**மதச்சார்பின்மை மற்றும் தேசிய ஒருமைப்பாடு குறித்து**

தேசிய ஒருமைப்பாடு குறித்த சிபிஐ மத்திய செயற்குழுவின் துணைக் கமிட்டிக்குப் பூபேஷ் பொறுப்பாளராக இருந்தார். தேசிய ஒருமைப்பாடு நிகழ்முறைக்கு மிகப் பெரிய தடங்கலாக இருப்பது அரிஜனங்களுக்கு எதிரான பாரபட்சமே என அவர் கருதினார். பூபேஷ் சாத்தியமான ஒவ்வொரு அரங்கத்திலும் நமது நாட்டின் மதசார்பற்ற ஜனநாயக அமைப்பு முறையைப் பாதுகாக்கவும் தேசிய ஒருமைப்பாட்டை வலிமைப்படுத்தவும் சக்திமிக்க தனது குரலை உயர்த்தினார்.

தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலில் சுமார் 15 ஆண்டுகள் அவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய முக்கிய பேச்சாளராக விளங்கினார்.

மாநிலங்களவையில் மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக எப்போதும் "துடிப்பானதாகவும் ஜீவன் ததும்பும் அமைப்பாக"வும் விளங்க வேண்டும் என பூபேஷ் வலியுறுத்துவார். உதாரணத்திற்கு அமெரிக்க அரசு பாக்கிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்குவதை மீண்டும் தொடங்க உள்ளது பற்றிய ராஜ்யசபா விவாதத்தின்போது பூபேஷ் குப்தா மிகச் சரியாக விமர்சனம் செய்தார்: "நமது பிராந்தியத்தில் இன்று அமெரிக்கா இராணுவசக்தியின் புதிய அதிகாரச் சமநிலையை ஏற்படுத்தவும் அதற்காக பாக்கிஸ்தானை இராணுவத் தளமாகப் பயன்படுத்தவும் விரும்புகிறது என்பது தெளிவு. எனவே இதனைப் பாக்கிஸ்தான் நாடுதான் ஆயுதப் போட்டியில் ஆர்வம் கொண்டிருக்கிறது, அமெரிக்காவுக்கு அந்த ஆர்வமெல்லாம் இல்லை, வெறுமே ஆயுதத்தை அமெரிக்கா விற்க மட்டுமே செய்கிறது என எடுத்துக் கொண்டுவிடக் கூடாது. இந்தியாவை மிரட்டினால் மட்டுமே, முடக்கி, தொல்லை கொடுத்து அச்சுறுத்திப் பணிய வைக்காதவரை – தெற்காசியாவின் இந்தப் பிராந்தியத்தில் தாங்கள் செல்வாக்கு செலுத்துவது சாத்தியமில்லை என்பதை அமெரிக்கா ஏகாதிபத்தியம் நன்கு அறியும். அதன் காரணமாகவே அவர்கள் நம்மைத் தனியாகக் குறிவைக்கிறார்கள், பாக்கிஸ்தானுக்கு மீண்டும் ஆயுதங்களை வழங்குகிறார்கள்" (காண்க: ராஜ்ய சபாவில் பூபேஷ் குப்தா, ராஜ்ய சபா விவாதங்கள், 1975 மார்ச் 10).

அவர் அடிக்கடி கிண்டலும் கேலியுமாகப் பேசுவார், ஆனால் ஒருபோதும் எவரையும் தரம் தாழ்த்திக் கொச்சையாகப் பேசியதில்லை; அவரது வாதங்களில் அறிவு மிளிரும் ஆனால் பணிவு இருக்கும்; மக்களின் நலவாழ்வு குறித்த கேள்விகள் எழும்போது அவரது வாதங்களில் அவரே அனுபவித்து ஆர்வமாக ஈடுபடுவார். பூபேஷ் குப்தா, பாடுபடும் லட்சோப லட்சம் மக்களின் கதாநாயகத் தலைவர், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் மாபெரும் ஆதரவாளர்.

**நாடாளுமன்ற நிபுணர், பூபேஷ்**


நாடாளுமன்ற விதிகள் மற்றும் நடைமுறைகளில் பாண்டித்யம் பெற்ற அவர் ஆளும் தரப்பின் சிறிய தவறு, குறைபாட்டையும் பொறுத்துக்கொள்ள மாட்டார். நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் கண்ணியம் மற்றும் மேன்மையைத் தவிர வேறு எதுவும் அவருக்குக் கூடுதல் முக்கியத்துவம் உடையதில்லை. நாடாளுமன்றச் செயல்பாடுகளின் நுட்பத்தில் நிபுணரான பூபேஷ் குப்தா, அது வழங்கும் அனைத்து வாய்ப்புகளையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்துவார்; கவன ஈர்ப்பு (பொது முக்கியத்துமுடைய பிரச்சனையின் மீது அமைச்சரின் பதிலைப் பெறுவதற்காகக் கவனத்தை ஈர்த்தல்), ஸ்பெஷல் மென்ஷன் (பொது முக்கியத்துமுடைய பிரச்சனையின் மீது அவையில் 250 வார்த்தைகளுக்கும் மிகாது 'சிறப்புக் குறிப்பை'ப் படிக்கும் உரிமை), குறுகிய காலக் கேள்விகளை எழுப்புதல், அரை மணிநேர விவாதம் முதலியவற்றைப் பயன்படுத்தி அவர் தனது கருத்தை அவையினருக்கு விளக்குவார். மேலும், வெளியுறவுக் கொள்கை, குடியரசுத் தலைவர் உரை, நிதி மசோதா, நிதிஒதுக்கீடு மசோதா மற்றும் அமைச்சகங்களின் செயல்பாடு மீது விவாதம் முதலானவற்றைப் பயன்படுத்தி உறுதியான வாதங்களைப் பின்னி மிக அற்புதமான உரைகளை நிகழ்த்துவார்.

மாஸ்கோவின் சென்ட்ரல் கிளினிகல் மருத்துவமனையில் ஜூன் மாத இறுதியில் பூபேஷ் குப்தா அனுமதிக்கப்பட்டார். வயிற்றில் ஏற்பட்ட கேன்சருக்காக 1981 ஜூலை 29ல் அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. சிகிச்சைக்குப் பிறகு தேறிவந்த அவர் கடுமையான மாரடைப்புக் காரணமாக 1981 ஆகஸ்ட் 6ம் நாள் மாஸ்கோவில் இயற்கை எய்தினார்.

அவர் மறைவுச் செய்தி கேட்டுப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி "ஞ்தோழர் பூபேஷ் குப்தா மறைவால், இந்த நாடு மிகுந்த அர்ப்பணிப்பும் ஒப்பற்ற பேச்சாற்றலும் மிக்க மைந்தர்களில் ஒருவரை இழந்து விட்டது" என்று தமது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார். பூபேஷ் குப்தா மறைவுக்கு நாடு பரவலாக அஞ்சலி செலுத்தியது.

*(உலகம் புகழ, அனைத்து மக்களின் வாழ்வுயர நமது நாடாளுமன்ற அவைகளை, அரசியல் அமைப்புச் சட்ட மாண்பு களின்படி உயர்த்திப் பிடிப்பதே அவருக்கான சரியான அஞ்சலியாகும்!)*

நியூஏஜ், தமிழில்: **நீலகண்டன்,**




# லால்சலாம் தோழர் ஆர்.ஏ.ஜி.

## கே.சுப்பராயன் எம்.பி.

இந்தியக் கம்யுனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், தொழிற்சங்க வாதியுமான ஆர்.ஏ.கோவிந்தராஜன் (வயது 83) 19.02.2022 அன்று காலை 3 மணிக்கு, கோவை மதுக்கரையை அடுத்த திருமலையாம்பாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எதினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளரும் திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினருமான கே.சுப்பராயன் அவரது உடலுக்கு செங்கொடி போர்த்தி மரியாதை செலுத்தியதோடு, இறுதி சடங்குகள் முடியும்வரை பங்கெடுத்துக் கொண்டார். அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தோழர் ஆர்.ஏ.கோவிந்தராஜன் காலமானார் என்பதை ஆழ்ந்த வேதனையுடன் நினைத்துப் பார்க்கிறேன்!

தமிழ்நாடுபஞ்சாலை தொழிற்சங்க இயக்கத்தில், நுட்பமான வரலாற்றுச் செய்திகளையும், பஞ்சாலை தொழில்சார்ந்த தொழில்நுட்ப விஷயங்களையும், அபார நினைவாற்றலுடன், அரிய தகவல்களாக, தேதி வாரியாக சேமித்து வைத்துள்ள தகவல் கிடங்கு அவர்!

சாதாரன பஞ்சாலைத் தொழிலாளியாக வாழ்க்கையைத் துவங்கி, தொழிற்சங்க இயக்கக் காரணங்களால் பழிவாங்கப்பட்டு, பல பஞ்சாலைகளில் பணியாற்றி, தொழிலையும், தொழிற்சங்க இயக்கத்தையும் கற்றுத் தேர்ந்து கரைகண்ட தொழிலாளி அவர்!

கடைசி மூச்சு நிற்கிற வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைத் தோழராக வாழ்ந்து மறைந்தார்!

அவரது மறைவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுஆழ்ந்த அஞ்சலி செலுத்துகிறது!

அவரது மறைவிற்கு எனது லால் சலாம்! லால் சலாம்! என கே.சுப்பராயன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## டி.எம்.மூர்த்தி

தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி.யின் பொது செயலாளர் டி.எம். மூர்த்தி விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:

ஏழு மில்களில் பணிபுரிந்து, அந்தந்த ஆலைகளில் தொழிற்சங்கத்தைத் துவக்கி, தொழிலாளர் பிரச்சினைகளை இயக்க பூர்வமாக முன்னெடுத்ததால், அத்தனை ஆலைகளிலும் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்.

கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தினுடைய செயலாளராக, பின்னர் பொதுச்செயலாளராக 1980 களில் பொறுப்பு வகித்தவர். காக்கி நிற முழுக்கால் சட்டை, வெள்ளை நிறச் சட்டை அணிந்து புல்லட் மோட்டார் பைக்கில் வலம் வருவார். பஞ்சாலைகளில் வேலைப்பளு, சம்பள நிர்ணயம், போனஸ் போன்றவை எப்போதும் பெரும் பிரச்சினையாக இருந்தன. எந்தெந்த இயந்திரத்தில் எவ்வளவு உற்பத்தி எடுக்க முடியும், தமிழ்நாட்டில் எந்தெந்த மில்களில் எத்தகைய வேலைப்பளு அமுலில் இருக்கிறது என்ற விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்தார்.

தொழிலாளர் தரப்பு நியாயங்களை அழுத்தமாகவும், எளிதில் மறுத்துவிட முடியாத ஆதாரங்களுடனும், எதிர்த்தரப்பை ஆத்திரப்படுத்தி பேச்சுவார்த்தையின் போக்கைக் கெடுத்து விடாமலும், அதே நேரத்தில் எள்ளளவும் விட்டுக் கொடுக்காமலும் முன்வைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவதில் ஆர்.ஏ.ஜி. நிபுணர். பின்னர் தமிழகப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். தமிழகத்தின் பஞ்சாலை நகரங்களுக்கெல்லாம், ஒரு பழைய அம்பாசிடர் காரை அவரே ஓட்டிக்கொண்டு வருவார். புதுச்சேரி மில்களில் சம்பள நிர்ணயம் குறித்து விசாரணை நடத்தி தீர்ப்பு அளிக்க, டிரிப்யூனல் அமைக்கப்பட்டபோது, தோழர் ஏ.எம்.கோபு அவர்களுடன் சேர்ந்து தோழர் ஆர்.ஏ.ஜி. தந்த பங்களிப்பு மறக்கவொண்ணாதது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் கிளைச் செயலாளர் தொடங்கி, கோவை மாவட்டச் செயலாளர், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர், மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் வரையில், பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தமிழ்நாடு ஏஐடியுசியின் செயலாளர்களில் ஒருவராகவும், தேசிய குழு உறுப்பினராகவும், கோவை மாவட்டச் செயலாளராகவும் இருந்தார். தற்போதும் மாநிலத் துணைத் தலைவராக, கோவை மாவட்ட ஏஐடியூசி தலைவராக கடைசி மூச்சுவரை பொறுப்பு வகித்தார்.

பஞ்சாலைத் தொழிற்சங்க வரலாற்றில், முதலாளிகளும் எடுபிடி தொழிற்சங்கங்களும் அரசாங்கமும் காவல் துறையும் சேர்ந்து நின்று..

தொழிலாளர்களுக்கு கடும் அச்சுறுத்தல் விடுத்து, வேலைநீக்கம் செய்து பழிவாங்கி, வெட்டு குத்து கொலைகளும் நடந்து கொண்டிருந்த காலத்தில்,

அவரின் மறைவு ஒரு பெரும் அத்தியாயத்தின் நிறைவாகும்.

தோழர் ஆர்.ஏ. கோவிந்தராஜன் அவர்கள் மறைவுக்கு தமிழ்நாடு ஏஐடியுசி கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது.

இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## தலைவர்கள் அஞ்சலி

ஆர்.ஏ.கோவிந்தராஜன் மரண செய்தி அறிந்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ., கோவை மாவட்ட செயலாளர் வி.எஸ். சுந்தரம், மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், வழக்கறிஞர் கே.சுப்பரமணியன், இஸ்கப் பொது செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்ட செயலாளர் பா.ப.ரமணி, தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் துணைப் பொது செயலாளர் என்.செல்வராஜ், கோயமுத்தூர் லேபர் யூனியன் பொது செயலாளர் ஆர்.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கோவை மாவட்ட தலைவர் சு. பழனிசாமி, வழக்கறிஞர் பி.குணசேகரன், மதுக்கரை ஒன்றியக்குழு செயலாளர் கே.ஆர்.தங்கராஜ், கோவை தெற்கு மண்டல செயலாளர் ஏ.சுப்பரமணியன், எஸ்.எஸ். குளம் கமிட்டி செயலாளர் சி.விஸ்வநாதன், மேட்டுப்பாளையம் ஆர்.மூர்த்தி, எஸ்.சண்முகம், பி.அறிவொளி, மதுக்கரை கிருஷ்ணசாமி, முத்துக்குமார், ஏ.பி.மணிபாரதி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) தேர்தல் முடிவுகள்

சென்னை பத்திரிகையாளர் சங்கம் 2022–2023 ஆம் ஆண்டுக்கான தேர்தல் பிப்.20 அன்று நடைபெற்றது. 81.5 சதவீத வாக்குகள் பதிவாகின. இதில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர் (போட்டியின்றித் தேர்வு)

**எல்.ஆர்.சங்கர்**

(போட்டோ எடிட்டர், தி டைம்ஸ் ஆப் இந்தியா)

பொதுச்செயலாளர்

**வ.மணிமாறன்**

(மூத்த இணை ஆசிரியர், மக்கள் டிவி)

**துணைத் தலைவர்கள்:** 1.வே.புகழேந்தி (மூத்த செய்தியாளர், தினகரன் நாளிதழ்) 2.பிருந்தா சீனிவாசன் (உதவி செய்தி ஆசிரியர், இந்து தமிழ் திசை),

**பொருளாளர் :** வே.சிறீதர் (தலைமை செய்தியாளர், விடுதலை நாளிதழ்)

**இணைச் செயலாளர்:** சு.குருவன்மிகநாதன் (மூத்த செய்தியாளர், தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்)

**செயற்குழு உறுப்பினர்கள்:**

1.திருமேனி சரவணன் (முதுநிலை துணை ஆசிரியர், சன் டிவி) 2.த.இளங்கோவன் ( செய்தியாளர் முரசொலி) 3.சசிரேகா காந்தி (தலைமை செய்தியாளர், சிகரம் மீடியா) 4. ம.அய்யனார் ராஜன் (மூத்த செய்தியாளர் ஆனந்த விகடன்) 5. த.பழனிவேல் (தெக்கூர் அனிதா) மூத்த உதவி ஆசிரியர், குமுதம்) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தேர்தல் அதிகாரி கோ.பூபதி, துணை தேர்தல் அதிகாரி பா.சிவகுமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 60. தனித்தனியாய் வாழ்வதில்

**தனித்தனியாய் வாழ்வதிலை தாரணியில் என்பதற்கு**
**ஆணைக் கடங்கல் கரி.**

மக்கள் தனித்தனியாய்ப் பிரிந்து வாழ இயலாது (இது இயற்கையும் அன்று) இதற்குச் சான்று யானைக் கூட்டம் ஒரு தலைமை யானையின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் காண்க.

**தனிமனித சிந்தனை சாதிக்கா ஒன்றும்**
**அணிதன் அறிவுக்கு மேல்.**

தனிமனிதன் எவ்வளவு சிந்தித்தாலும் சிந்தனை முழுமை பெறாது. அதனால் எச்செயலையும் சாதித்தல் இயலாது. பலர்கூடிச் சிந்தித்து எடுக்கும் முடிவே மேலானதாக இருக்கும்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

ஜனசக்தி முதல் பக்கத்தில் “எடப்பாடி பழனிசாமி 27 நாட்களில் கைதாவார்” என்று தேர்தல் பிரச்சாரத்தில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் பேசியபடி 27 நாட்களில் எடப்பாடி கைதாக வாய்ப்பு உள்ளதா? மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

– **மணிகண்டன்,** மாம்பலம் சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

மறைந்த முன்னாள் மாநிலச் செயலாளர் ப.மாணிக்கம் அவர்கள் எழுதிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை போராட்ட வரலாறு என்ற கட்டுரை மிகவும் ஆழமானது. கட்சியின் நிலைப்பாடுகளை முழுமையாக ஆய்வு செய்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியில் பிளவு ஏற்படக் கூடாது என்பது கோடிட்டு காட்டப்படுகிறது.

– **இராதா கிருஷ்ணன்,** தருமபுரி

**ஆசிரியர் ஜனசக்தி,**

நாட்டின் பொருளாதார நெருக்கடி உடனடியாக மீட்கப்படவேண்டிய அவசியம் உள்ளது. பா.ஜ.க. அரசால் இதை சாதிக்க முடியாது. அவர்கள் கார்ப்பரேட் லாபங்கள் மீதே அக்கறை கொண்டுள்ளனர் என்று நாடாளுமன்றத்தில் நிதி நிலை அறிக்கையின் போது, பினாய் விஸ்வம் எம்.பி. சரியாக சாட்டையடி கொடுத்துள்ளார்.

– **முனியசாமி,** ஒட்டப்பிடாரம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

தனியார் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் 50 சதவீத மருத்துவ இடங்களுக்கு கட்டணங்கள் நிர்ணயித்திட வேண்டும் என்ற டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் அவர்களின் கட்டுரை மிகவும் சரியானது.

இதன்மூலம் ஏழை எளிய மாணவர்கள் பெரிதும் பயன்பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

– **ராஜேந்திரன்,** ஒரத்தநாடு புதூர்



ஏமாற்று வித்தையில் ஈடுபடும் மோடி அமித்ஷா ஆட்சிக்கு வருவதற்கு முன்பே பக்ராநங்கல் அணையை கட்ட அங்கு வேலைப்பார்த்த பெண்ணை கொண்டே நேரு முன்னிலையில் திறந்து வைத்த அறிய நிகழ்வு.

### தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ்

## அட்டை பெற்ற அனைவருக்கும் வேலை வழங்குக!

தருமபுரி மாவட்டம்,தருமபுரி ஒன்றியம் அதகப்பாடி கிராம ஊராட்சி கீழ் குள்ளம்பட்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க கிளை பேரவைக் கூட்டம் ஒன்றியக்குழு உறுப்பினர் சின்னம்மாள் தலைமையில் நடைபெற்றது இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் உரிமைகள் குறித்து பேசினார். இதில் சங்க ஒன்றிய செயலாளர் ஜி பச்சாகவுண்டர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ பை மாதையன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் கீழ் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தருமபுரி ஒன்றியம் அதகப்பாடி கிராம ஊராட்சி எல்லையில் இருக்கும் கீழ்குள்ளம்பட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாய தொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். எல்லா குடும்பத்திலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் வேலை அட்டை பெற்றுள்ளவர்கள் 125 பேர், இப்பகுதியில் எவ்வித பணியும் இல்லாதனால் வேலை அட்டை பெற்ற அனைவருக்கும் வேலை வழங்க வேண்டும் என்று ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் கடந்த 2020–2021, 2021–2022 ஆகிய இரண்டு நிதி ஆண்டில் ஒருவருக்குகூட வேலை வழங்கவில்லை அதனால் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் வேலை வழங்க வேண்டி தனிநபர் விண்ணப்பங்களை கிராம ஊராட்சி செயலாளரிடம் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.



## காஞ்சிபுரத்தில் ஆர்ப்பாட்டம்

மூன்று வேளாண் சட்டங்களை வாபஸ் பெறக் கோரி போராடிய விவசாயிகள் மீது காரை ஏற்றி படுகொலை செய்த, மத்திய அமைச்சர் மகனை ஜாமினில் விடுதலை செய்ததைக் கண்டித்தும், குற்றவாளியின் ஜாமீனை நீதிமன்றம் ரத்து செய்து மீண்டும் சிறையில் அடைக்கக் கோரியும் காஞ்சிபுரத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கே.நேரு தலைமை தங்கினார். வி.ச. மாவட்டச் செயலாளர் ஆ.மூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



## வி.தொ.ச. கோரிக்கை மாநாடு

புதுச்சேரி மாநில விவசாய தொழிலாளர்களின் கோரிக்கை மாநாட்டினை வில்லியனூர் வாணியர் திருமண மண்டபத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநில செயலாளர் தோழர் அ.மு.சலீம் துவங்கி வைத்தார்.

### மக்களுக்கு ஒதுக்கிய பணத்தை

# அதிமுகவினர் தங்களுக்கு ஒதுக்கிக் கொண்டனர்

### இரா.முத்தரசன் பேச்சு



விருதுநகர் மாவட்டத்திற்கு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்த சிபிஐ மாநில செயலாளர் இரா. முத்தரசன் இராஜபாளையம், சேத்தூர், சிவகிரி, வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் திமுக தலைமையிலான கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து பேசியதாவது, “கடந்த பத்து ஆண்டுகளாக அதிமுக உள்ளாட்சி தேர்தலை நடத்தவில்லை. உள்ளாட்சியில் மக்களுக்காக ஒதுக்கிய பணத்தை அதிமுகவினர் தங்களுக்கு ஒதுக்கி கொண்டனர். உள்ளாட்சி அமைச்சராக இருந்த வேலுமணி 110 கோடி சொத்து சேர்த்துள்ளார் என எல்லா பத்திரிக்கைகளிலும் எழுதி உள்ளார்கள்.

திமுக தேர்தல் நேரத்தில் ஆட்சிக்கு வந்தால் உள்ளாட்சி தேர்தலை நடத்துவோம் என கூறினார்கள். வாக்குறுதிப்படி இத்தேர்தல் நடைபெறுகிறது. ஒன்றிய மோடி அரசு இவ்வருட பட்ஜெட்டில் பெரும் முதலாளிகளுக்கு 12 சதவீத வரியை 7 சதவீமாக குறைத்துள்ளது. ஆனால் ஏழை மக்கள் பயன்படுத்தும் விளக்கமாறு, பென்சில், ரப்பர், தீப்பெட்டி, அலுமினிய பாத்திரம் ஆகியவைகளுக்கு வரியை உயர்த்தியுள்ளார்கள். யாருக்கெல்லாம் வரி போடக் கூடாதோ அவர்களுக்கு வரியை போட்டுள்ளார்கள். ஜாதி மத வெறியை கிளப்பிவிட்டு மக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிக்கின்றனர். அப்படிப்பட்ட பாஜகட்சியை அதிமுக ஆதரிக்கிறது. எனவே பல்வேறு மக்கள் நல திட்டங்களை நிறைவேற்றி வரும் திமுக கூட்டணியிலுள்ள கட்சிகளுக்கு உதயசூரியன், கதிர்அரிவாள், அந்தந்த கட்சி சின்னங்களுக்கு வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும். அதிமுகவை டெபாசிட் இழக்க செய்யுங்கள். இவ்வாறு இரா.முத்தரசன் பேசினார். இதில் மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி, வி. அழகிரிசாமி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் வி.இரவி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### பெண் கட்டுமான தொழிலாளர்களின் ஓய்வு வயதை

# 50ஆக குறைக்க வேண்டும்

### பெண் கட்டுமானத் தொழிலாளர்கள் வலியுறுத்தல்



தருமபுரி மாவட்ட ஏஐடியூசி பெண் கட்டுமான தொழிலாளர்களின் சிறப்பு பேரவை கூட்டம் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ஏஐடியூசி தொழிற்சங்கத்தின் தர்மபுரி மாவட்ட பொருளாளர் கே.விஜயா தலைமை வகித்தார். ஏஐடியூசி மாநில செயலாளர் எம்.முனுசாமி பேரவை கூட்டத்தை தொடங்கி வைத்து பேசினார்.

இச்சங்கத்தின் பெண் கட்டுமான தொழிலாளர் சங்க மாநில அமைப்பாளர் சி.நந்தினி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் பெண் கட்டுமான தொழிலாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதிய வயதை 50 ஆக குறைக்க வேண்டும்.பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு 6 மாதம் பிரசவ கால உதவி தொகை வழங்க தமிழக அரசு சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண் கட்டுமான தொழிலாளர்களுக்கு தினமும் வேலை கிடைக்க தொழிலாளர் நலவாரியமும், தமிழக அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. கூட்டத்தில் ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில துணை பொது செயலாளர் என். செல்வராஜ், தருமபுரி மாவட்ட ஏஐடி யூசி பொது செயலாளர் கே.மணி, மாவட்டத் தலைவர் எம்.மாதேஸ்வரன், கட்டுமான சங்கத்தின் மாவட்ட பொது செயலாளர் ஆர்.சுதர்சனன், மாவட்டத் தலைவர் குழந்தைவேல் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

### மூத்த தொழிற்சங்கத் தலைவர்

# ஆர்.ஏ.கோவிந்தராஜன் மறைவு

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட முன்னோடியும், மூத்த தொழிற்சங்க தலைவருமான தோழர் ஆர்.ஏ. கோவிந்தராஜன் (83) 19.02.2022 அதிகாலை கோவை மாவட்டம், மதுக்கரை அருகில் உள்ள திருமலையாம் பாளையத்தில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1943 ஆம் ஆண்டு பிறந்தவர். சிறுவயதில் தந்தையை இழந்து, தாய் மாமா ஆதரவில் ஒத்தக்கால் மண்டபத்தில் வளர்ந்தவர். சிறுவயதில் திரைப்படத்துறையில் ஆர்வம் கொண்டு, அதில் நுழையும் முயற்சியில் ஈடுபட்டவர். குடும்ப வறுமை நிலை கருதி சின்னப்பா தேவர் முயற்சியில் பஞ்சாலையில் பணிக்கு சேர்ந்தார்.

1950 ஆம் ஆண்டுகளில் கோவை மாநகரிலும், அதன் சுற்று வட்டாங்களிலும் நடைபெற்ற தொழிலாளர் இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர். தொழிற்சங்கம் அமைத்து, தொழிலாளர்களை திரட்டி போராடியவர். தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து பொது வாழ்வை மேற்கொண்டவர். தொழிலாளர்களை அணி திரட்டுவதிலும், அவர்களை வழிநடத்துவதிலும், தொழிலாளர்களின் கோரிக்கைகள் மீது ஆலை முதலாளிகள் அல்லது அரசு அதிகாரிகளுடன் பேசுவதில் தனித் தேர்ச்சி பெற்றவர்.

தொழிலாளர் இயக்க வரலாற்று தொடர்ச்சியும், பெருமையும் கொண்ட கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர், கோவை மாவட்ட ஏஐடியூசி கவுன்சில் தலைவர் என பல பொறுப்புகளில் மிகச்சிறப்பாக பணியாற்றியவர். அரசு அமைத்த முத்தரப்புக் குழுக்களில் பங்கேற்று, ஏஐடியூசியின் கொள்கை நிலைகளை பதிய வைத்தவர். சர்வதேச அமைப்புகளில் பங்கேற்று இந்தியத் தொழிலாளர் இயக்க அனுபவங்களை பகிர்ந்து கொண்டவர்.

கம்யூனிஸ்ட் கட்சி தத்துவத் தெளிவுள்ளவர். கட்சியின் கோவை மாவட்டச் செயலாளர், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர், கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் என பல நிலைகளில் செயல்பட்டு, இறுதி மூச்சு வரை கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினராக செயல்பட்டவர்.

தாய் மாமாவின் மகளை வாழ்க்கை இணையாக கொண் டவர். இவரது மனைவி சில ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகிவிட்டார். இவர்களுக்கு சம்பத் என்ற மகனும் கல்பனா என்ற மகளும் இருக்கிறார்கள். தொழிலாளர் இயக்கத்திலும், கம்யூனிஸ்டு கட்சியிலும் தனது பங்களிப்பை செலுத்தி, தனி முத்திரை பதித்துள்ள தோழர் ஆர்.ஏ.கோவிந்தராஜன் மறைவு ஈடு செய்ய இயலாத இழப்பாகும்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு செவ்வணக்கம் கூறி, ஆழ்ந்த அஞ்சலி தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது மகளுக்கும்; மகனுக்கும் , கோவை மாவட்ட தோழர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## ஒரு ஓட்டு கூட வாங்காத பா.ம.க;

# அதிக வாக்குகளை கைப்பற்றிய தி.மு.க.

கும்பகோணம் மாநகராட்சி தேர்தலில் பா.ம.க. வேட்பாளர் ஒருவர் ஒரு ஓட்டு கூட வாங்கவில்லை. மாநகராட்சியிலேயே அதிக வாக்குகளை கைப்பற்றிய வேட்பாளராக தி.மு.க. வேட்பாளர் உள்ளார்.

**முதல் தேர்தல்:** தஞ்சை மாவட்டத்தில் உள்ள கும்பகோணம் நகராட்சியாக இருந்தது. மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு கடந்த 19ந் தேதி முதன் முறையாக கும்பகோணம் மாநகராட்சி தேர்தல் நடந்தது. மொத்தம் உள்ள 48 வார்டுகளில் 38 வார்டுகளை கைப்பற்றி தி.மு.க. வெற்றி வாகை சூடி உள்ளது. இதனால் 'முதல் மேயர்' பதவி தி.மு.க.வுக்கு கிட்டி உள்ளது.

கும்பகோணம் மாநகராட்சியில் தனித்து தேர்தல் களம் கண்ட அ.தி.மு.க. 3 வார்டுகளில் மட்டுமே வெற்றி பெற்றது. 2 வார்டுகளில் காங்கிரஸ் வேட்பாளர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளர்கள் தலா ஒரு வார்டிலும், சுயேச்சை வேட்பாளர்கள் 3 வார்டுகளிலும் வெற்றி பெற்றனர்.

**ஒரு ஓட்டு கூட கிடைக்கவில்லை:** கும்பகோணம் மாநகராட்சியில் 35வது வார்டில் போட்டியிட்ட பா.ம.க. வேட்பாளர் செந்தில்குமாருக்கு ஒரு ஓட்டு கூட கிடைக்கவில்லை. இதேபோல் 30வது வார்டில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் முருகன் மாநகராட்சியிலேயே அதிக வாக்குகளை கைப்பற்றி உள்ளார். அவருக்கு மொத்தம் 1,480 வாக்குகள் கிடைத்துள்ளது.

## அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற தோழியர் சுபிதா பேகம்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஜம்பை பேரூராட்சி 14 வது வார்டில் போட்டியிட்ட தோழியர் சுபிதா பேகம் மாபெரும் வெற்றிபெற்றுள்ளார். பேரூராட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளார். மொத்த வாக்குகள் பதிவானவை 597. சிபிஐ 415. அதிமுக 112, சுயேட்சை 70. வித்தியாசம்: 303. வாக்குகள்.

### சாயல்குடி பேரூராட்சியில்

## 15 வார்டுகளையும் சுயேட்சைகள் கைப்பற்றினர்

ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமநாதபுரம், ராமேஸ்வரம், பரமக்குடி, கீழக்கரை என 4 நகராட்சிகளும், மண்டபம், தொண்டி, சாயல்குடி, முதுகுளத்தூர், கமுதி, அபிராமம், ஆர்.எஸ். மங்கலம் ஆகிய 7 பேரூராட்சிகள் உள்ளன. இந்த 11 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் சாயல்குடி பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் திமுக, அதிமுக, காங்கிரஸ், பாஜக உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளைச் சேர்ந்த ஒரு வேட்பாளர் கூட வெற்றி பெறவில்லை. சாயல்குடி பேரூராட்சியின் 15 தொகுதிகளிலும் சுயேச்சை வேட்பாளர்கள் மட்டுமே வெற்றி பெற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இதன்மூலம் சாயல்குடி பேரூராட்சி சுயேச்சைகளின் வசமாகி உள்ளது. இந்த பேரூராட்சியில் சுயேச்சைகள் அனைவரும் ஒன்றிணைந்து, அரசியல் கட்சி சாராத நபர்களை, தலைவர், துணை தலைவர் பதவிக்கு தேர்வு செய்ய உள்ளனர்.

# எடப்பாடி நகராட்சியை கைப்பற்றிய திமுக

எடப்பாடி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 50 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக திமுக அதிக இடங்களில் வெற்றி பெற்று எடப்பாடி நகராட்சியினை கைப்பற்றியுள்ளது.

கடந்த 1965ஆம் ஆண்டுமுதல் எடப்பாடி நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் முதல்முறையாக 1969 நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட மாரிமுத்து பக்தர் வெற்றி பெற்றார்.

தொடர்ந்து அவர் மூன்று முறை வெற்றி பெற்ற நிலையில், அவர் மறைவுக்குப்பின் அவரது மகன் இருசப்பமேத்தா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு அவரும் தொடர்ந்து 3 முறை வெற்றி பெற்றார். அதனை அடுத்து 2011ல் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக வேட்பாளர் டி.கதிரேசன் நகர்மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிலையில் அண்மையில் நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான முடிவுகள் வெளிவந்த நிலையில் எடப்பாடி நகராட்சியில் உள்ள 30 வார்டுகளில் தி.மு.க16, காங்கிரஸ் 1, அ.தி.மு.க13 என வெற்றிபெற்ற நிலையில் முதல் முறையாக எடப்பாடி நகராட்சியினை திமுக கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

## மறைமலைநகர் செக் பாயிண்ட்

# தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்து

மறைமலை நகரில் இயங்கிவரும் செக் பாயிண்ட் ஏ.எல்.எஸ். நிறுவனத்தின் நிர்வாகத்திற்கும் ஏஐடியுசி தொழிற் சங்கத்திற்கும் இடையே ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகள் குறித்த பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டு நீண்டகால முத்தரப்பு ஒப்பந்தம் பிப்ரவரி 18ந்தேதி ஸ்ரீ பெரும்புதூர், இருங்காட்டு கோட்டை தொழிலாளர் துணை ஆணையர் எம்.கமலக் கண்ணன் முன்னிலையில் கையெழுத்தானது.



இவ்வொப்பந்தத்தில் சங்கத்தின் தலைவரும் மாநில துணை பொதுச் செயலாளருமான கே.இரவி, மாவட்ட பொதுச் செயலாளர் எம். ஜஹாங்கீர், சங்க ஆலோசகர் பி. ரவிச்சந்திரன், சங்க செயலாளர் எஸ்.வாதி ராசன், துணை தலைவர் எம்.அலெக்ஸ்சாண்டர் உட்பட சங்க நிர்வாகிகளும், நிர்வாகத்தின் சார்பாக கம்பெனியின் நிதி இயக்குனர் நிர்மலா மற்றும் மனித வள மேலாளர் வி.ஆர்.கோவிந்தராஜன் ஆகியோர் கையெழுத்திட்டனர். கடந்த 01.04. 2020 முதல் அமல்படுத்துவதற்கான ஊதிய உயர்வு மற்றும் சலுகைக் காண கோரிக்கைப் பட்டியல் சங்கத்தின் சார்பில் நிர்வாகத்திடம் உரிய காலத்தில் வழங்கப் பட்டு உரிய பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டப்பட்டது. ஆனால் நிர்வாகம் கொரனாவை காரணம் காட்டி பேச்சுவார்த்தையை துவங்காமல் இழுத்தடித்ததால் தொழிலாளர் துணை ஆணையர் முன்பு தொழிற் தகராறு தாவா எழுப்பப்பட்டு, பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு ஒப்பந்தம் இறுதிபடுத்தப்பட்ட பின் கையெழுத்திடப்பட்டது.

கொரானா நெருக்கடி காலத்திலும் நான்கு ஆண்டிற்கு குறைந்த பட்சம் ரூ.13,170 முதல் அதிகபட்சமாக ரூ.14,920 ஊதிய உயர்வும், அகவிலைப் படியில் 50 சதவீத உயர்வும் மற்றும் விடுப்பு, விபத்து காப்பீடு, பணி காலத்தில் மரணமடைந்தால் நிர்வாகம் ரூ.5 லட்சம் வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளும் ஏற்கப்பட்டன. மேலும் 01.04.2020 முதல் நிலுவை தொகை வழங்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.





### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்

# இரா.நல்லகண்ணு வாக்களித்தார்

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு சென்னை மாநகர் சிஐடி நகர் நடுநிலைப் பள்ளி வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

## ஓ.பன்னீர்செல்வம் வார்டில் அதிமுக தோல்வி

தேனி மாவட்டம் பெரியகுளம் நகராட்சி 26வது வார்டில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவரது மகனும் தேனி நாடாளுமன்ற உறுப்பினருமான ரவீந்திரநாத்தும் அதே வார்டில் குடியிருந்து வருகிறார்.

இந்த வார்டில் அ.தி.மு.க. சார்பில் மஞ்சுளா, தி.மு.க. சார்பில் சந்தானலட்சுமி, அ.ம.மு.க. சார்பில் வனிதா ஆகியோர் போட்டியிட்டனர். இதில் தி.மு.க. வேட்பாளர் சந்தானலட்சுமி 451 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அ.திமு.க. வேட்பாளருக்கு 352 வாக்குகள் மட்டுமே கிடைத்தது. அமமுக வேட்பாளர் 17 வாக்குகள் பெற்றுள்ளார்.

### சிங்காரவேலர் சிலைக்கு

# இரா.நல்லகண்ணு மாலை அணிவித்தார்

சிந்தனை சிற்பி சிங்காரவேலரின் 163வது பிறந்த நாளை முன்னிட்டு பிப். 18 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்புள்ள அவரது சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு மாலை அணிவித்தார். கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தி, அவரது பொது வாழ்க்கை குறித்துப் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் எல்.மேகநாதன், பொருளாளர் கே.கே.சுப்பிரமணியன், வி.தொ.ச. மாட்டச் செயலாளர் பி.எஸ்.எல்லப்பன், வி.ச. மாவட்டச் செயலாளர் ஆ.மூர்த்தி, வட சென்னை முன்னாள் மாவட்டச் செயலாளர் மு.சம்பத், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர்கள் கீ.சு.குமார், எஸ்.கே.சிவா, மாநில தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், ஏஐடியூசி தலைவர் எஸ்.குப்பன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆ.சுப்பிரமணி, சு.பாஸ்கர், மு.வரதன், அருள், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### காவக்காடு பெருமாள் குண்டுகோயில்

# கிளை மாநாடு

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், காவக்காடு பெருமாள்குண்டுகோயில் கிராமத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கிளை மாநாடு நடைபெற்றது. பொருளாளர் சுப்ரமணி தலைமை வகித்தார். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், வட்டார செயலாளர் சி.சிவன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

காவக்காடு பெருமாள்குண்டு கிராமத்திலிருந்து சின்னராஜ் கொட்டாய் வரை செல்லும் குண்டும், குழியுமாக உள்ள நடைபாதை சாலையை முறையான தார் சாலை அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கிராம மக்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்து ஒகேனக்கல் குடிநீர் சீராக வழங்க வேண்டும். 500க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் இக்கிராமத்தில் புதிய ரேசன் கடை திறக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.


கழிவுநீர் வெளியேற சாக்கடை கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அமைத்து தர வேண்டும். காவக்காடு பெருமாள்குண்டு காலனியில் வசிக்கும் மக்களுக்கு தொகுப்பு வீடு கட்டி கொடுக்க வேண்டும். வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டத்திற்கு வேலை தேடி செல்லும் இக்கிராம மக்களுக்கு உள்ளூரில் தொழில் செய்யும் வகையில் சுய தொழில் பயிற்சி வழங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்கூடம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் செயலாளராக முருகன், துணைச் செயலாளராக கோவிந்தராஜ், பொருளாளராக சுப்ரமணி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

## பல்லவர் வரலாறு

தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய,, பல்லவ மன்னர்கள் முக்கியமானவர்கள் ஆவார்கள். தொண்டை மண்டலத்தை ஆட்சி செய்த பல்லவ மன்னர்களைப் பற்றி. ' பல்லவர் வரலாறு'' என்கிற இந்நூலை டாக்டர் மா.இராசமாணிக்கனார் எழுதியுள்ளார்.

பல்லவர்களின் வருகையும் அவர்கள் மேற்கொண்ட அரசியல், கலைப்பணி, சமயப்பணி, கல்வி,பண்பாடு, நாகரீகம் என பல்வேறு தளங்களில் ஆராய்ந்துள்ளார். அதற்கு ஆதாரங்களாக கல்வெட்டு செய்திகளையும், சிற்பக் கலைகளையும், இலக்கியங்களையும், ஓவிய கலைகளையும் ஆதாரமாக தந்துள்ளார். பல்லவர்களின் வரலாற்றை தக்க சான்றுகளுடன் தன்னுடைய எழுத்தாற்றல் மூலம் சிறந்த முறையில் வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர்.




பல்லவர் ஆட்சிக் காலத்தில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கதம்ப அரசர் மரபைத் தோற்றுவித்த மயூரசன் மன். முதற் பல்லவர் காலத்தில் காஞ்சியில் இருந்த வடமொழிக் கல்லூரியில் படிக்க வந்தான். அவன் காலம் கி.பி. 345 – 370 என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனவே, காஞ்சி வடமொழிக் கல்லூரி அக்காலத்தில் சிறப்புற்று இருந்தது என்பதை இதன் மூலம் அறியலாம்.

பல்லவரை உலகம் புகழ வைத்த பெருமை ஓவிய, சிற்ப கலைஞர்களுக்கு உரித்தானது. உயிருள்ள சித்தன்னவாசல் ஓவியங்கள், மாமல்லபுரம்,வைகுந்த பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில் இவற்றில் உள்ள வியப்பூட்டும் சிற்பங்கள். இன்ன பிறவும் இயற்றிய பெருமக்களின் கலை அறிவை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது?.

மகேந்திரவர்மனை பற்றிய கல்வெட்டின் மூலம் அவன் தன் நாட்டு பல சமயங்களை ஆராய்ந்து அறிந்தவன். இவன் எச்சமயத்தில் இருப்பினும் அதனை பழுதற உணர்ந்தவன் என்பதற்கு சித்தன்னவாசல்( சமணத்தைப் பற்றிய ) சித்திரங்களும். திருச்சிராப்பள்ளி மலைக் கோயில் (சைவத்தைப் பற்றிய ) கல்வெட்டுக்களும் தக்க சான்றாகும்.

பல்லவ மரபினர் தொண்டை நாட்டை மட்டுமின்றி, சோழ நாட்டையும் கைப்பற்றி ஆட்சி செய்துள்ளனர். தமிழகத்தில் இவர்களது ஆட்சிக் காலம் ஏறத்தாழ 650 வருடங்கள் என அறிய முடிகிறது. பல்லவர்கள் ஆட்சி காலம் என்பது கலைகளின் பொற்காலம் எனக் கூறலாம். இன்னும் நாம் அறிந்து கொள்ள ஏராளமான செய்திகள் இந்நூல் முழுவதும் உள்ளது. எனவே டாக்டர் மா.இராசமாணிக்கனார் எழுதிய 'பல்லவர் வரலாறு' எனும் இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– சமரன்


**நூலாசிரியர் : டாக்டர் மா.இராசமாணிக்கனார்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்,142. ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 326 விலை : ரூ.260**

# நூல் நயம்

## புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

மரபுக்கவிதைகள் கோலோச்சிய காலத்தில் புது கவிதை என்னும் ஜன்னலை பாரதி திறந்து வைத்தான். முன்பு புழக்கத்தில் இருந்து வருகிற மரபு ரீதியாக அமைந்த ஒன்றில் இருந்து மாறுபட்டு அல்லது அதை மீறி தோன்றுவது புதுசு. மரபு ரீதியான, யாப்பு இலக்கணத்தோடு ஒட்டிய கவிதையில் இருந்து மாறுபடும் இக்கவிதைப் படைப்பு புதுக்கவிதை என பெயர் பெற்றது பொருத்தமே ஆகும்.

பாரதி தன் எண்ணங்களை எழுத்தாக உருவாக்குவதற்கு பல சோதனைகளில் ஆர்வம் கொண்டிருந்தார் என்பது அவரது படைப்புகளை ஆராய்வோருக்கு புரியும். வசனத்தை மீறிய, ஆயினும் கவிதையின் பூரணத்துவத்தை எய்தாத ஒரு முயற்சியாக அவர் படைத்துள்ள வசன கவிதைகளே சாட்சிகள்.எனவே கவி சுப்பிரமணிய பாரதிதான் தமிழ் புதுக்கவிதையின் தந்தை ஆவார்.




ரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலி முதலிய படைப்புகளை ரசித்த பாரதி. அவற்றைப் போல் வசன கவிதை படைக்க முன் வந்திருக்கலாம். அக்காலத்தில் அவருக்கு வால்ட் விட்மனின் பாடல்களும் அறிமுகமாகி இருந்தன. பாரதிக்குப் பிறகு புதுக்கவிதை முயற்சியில் நா.பிச்சமூர்த்தி ஈடுபட்டார். இதன்பின்னர் புதுக்கவிதை முயற்சி யில் ஒரு பெரும் பட்டாளமே ஈடுபட்டது

புதுக்கவிதை படைப்பாளிகளில் முக்கியமான வர்களும், ரசிகர்களும் மரபுக்கவிதை அழிந்துவிட வேண்டும் என்றோ,புதுக்கவிதை மட்டுமே வாழ்ந்து வளரவேண்டும் என்று சொல்லவில்லை. நல்ல கவிதைகளை நாடுபவர்கள் இரண்டு வகைக் கவிதைகளையும் வரவேற்று ரசித்து மகிழ தயாராக இருக்கிறார்கள்.

புதிது புதிதாக அனேகர் எழுதுகிறார்கள். அவர்களது படைப்புகளில் எளிமையும், இனிமையும், பார்வை வீச்சும் காணப்படுகின்றன.

புதுக்கவிதையின் வரலாற்றை ''புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்'' என்ற தலைப்பில் வல்லிக்கண்ணன் எழுதியுள்ளார். இந்நூல் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நூலாகும். புதுக்கவிதையின் வரலாற்றை அறிந்துகொள்ள விரும்பும் அனைவரும் ஒருமுறை வாசிக்க வேண்டிய நூல் இது. அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம்.

– இன்சுவை பாரதி

**நூலாசிரியர் : வல்லிக்கண்ணன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்**
**142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை – 14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 348 விலை : ரூ.230**

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022
### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி

**முடிவுகள் - நகராட்சி வார்டு உறுப்பினர் - அனைத்து மாவட்டங்கள்**

| மாவட்டத்தின் பெயர் | நகராட்சியின் பெயர் | வார்டு பெயர் | வேட்பாளர் பெயர் |
|---|---|---|---|
| ஈரோடு | பவானி | வார்டு 11 | திரு சி மணி |
| ஈரோடு | பவானி | வார்டு 20 | திருமதி கு கல்பனா |
| சிவகங்கை | காரைக்குடி | வார்டு 26 | திருமதி க மஞ்சுளா |
| தஞ்சாவூர் | அதிராமபட்டினம் | வார்டு 19 | திருமதி ஹா தில்நவாஸ் பேகம் |
| திருச்சிராப்பள்ளி | மணப்பாறை | வார்டு 19 | திரு த தங்கமணி |
| திருச்சிராப்பள்ளி | மணப்பாறை | வார்டு 20 | திருமதி த மனோன்மணி |
| திருப்பூர் | திருமுருகன் பூண்டி | வார்டு 1 | திருமதி ப மகேஸ்வரி |
| திருப்பூர் | திருமுருகன் பூண்டி | வார்டு 15 | திரு ந கதிர்வேல் |
| திருப்பூர் | திருமுருகன் பூண்டி | வார்டு 19 | திருமதி சு கோகிலா |
| திருப்பூர் | திருமுருகன் பூண்டி | வார்டு 20 | திருமதி பொ ராஜேஸ்வரி |
| திருப்பூர் | திருமுருகன் பூண்டி | வார்டு 24 | திருமதி கி லீலாவதி |
| திருவாரூர் | கூத்தாநல்லூர் | வார்டு 1 | திருமதி கு தனலெட்சுமி |
| திருவாரூர் | கூத்தாநல்லூர் | வார்டு 14 | திரு மு சுதர்சன் |
| திருவாரூர் | திருத்துறைப்பூண்டி | வார்டு 21 | திருமதி அ லெட்சுமி |
| தூத்துக்குடி | கோவில்பட்டி | வார்டு 17 | திருமதி அ சரோஜா |
| தென்காசி | புளியங்குடி | வார்டு 29 | திருமதி ச பாக்கியம் |
| தேனி | சின்னமனூர் | வார்டு 5 | திரு இரா பெருமாள் |
| தேனி | போடிநாயக்கனூர் | வார்டு 30 | திரு கி பெருமாள் |
| நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் | வார்டு 15 | திருமதி கு ஜோதிலெட்சுமி |

## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022
### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி

**முடிவுகள் - பேரூராட்சி வார்டு உறுப்பினர் - அனைத்து மாவட்டங்கள்**

| மாவட்டத்தின் பெயர் | பேரூராட்சியின் பெயர் | வார்டு பெயர் | வேட்பாளர் பெயர் |
|---|---|---|---|
| ஈரோடு | பவானிசாகர் | வார்டு 13 | திருமதி கவிதா |
| ஈரோடு | ஜம்பை | வார்டு 14 | திருமதி அ சுபிதாபேகம் |
| கரூர் | புலியூர் | வார்டு 1 | திருமதி க கலாராணி |
| கன்னியாகுமரி | பூதபாண்டி | வார்டு 8 | திரு ச அனில்குமார் |
| கன்னியாகுமரி | வெள்ளிமலை | வார்டு 2 | திருமதி சு சுதா |
| கிருஷ்ணகிரி | கெலமங்களம் | வார்டு 9 | திருமதி வி எல்லம்மா |
| கிருஷ்ணகிரி | தேன்கனிகோட்டை | வார்டு 15 | திரு கா ஜெயந்த் எ ஜெயந்தா |
| கோயம்புத்தூர் | பள்ளப்பாளையம் | வார்டு 12 | திருமதி பே ஜெகதீஸ்வரி |
| திருச்சிராப்பள்ளி | கூத்தைப்பார் | வார்டு 18 | திருமதி ஜெ வைசூரியா |
| திருப்பூர் | ஊத்துக்குளி | வார்டு 13 | திரு வி எ சரவணன் |
| திருவாரூர் | கொரடாச்சேரி | வார்டு 10 | திருமதி ரெ மரகதம் |
| தென்காசி | சிவகிரி | வார்டு 2 | திரு பி பாலசுப்பிரமணியன் |
| தென்காசி | சிவகிரி | வார்டு 9 | திரு பெ அருணாசலம் |
| தேனி | ஆண்டிப்பட்டி | வார்டு 10 | திருமதி மு மீனாட்சி |
| தேனி | மேல சொக்கநாதபுரம் | வார்டு 6 | திருமதி சி பஞ்சவர்ணம் |
| புதுக்கோட்டை | கீரமங்கலம் | வார்டு 11 | திருமதி த முத்தமிழ்செல்வி |
| மயிலாடுதுறை | வைத்தீஸ்வரன்கோவில் | வார்டு 2 | திருமதி கி வித்யாதேவி |
| விருதுநகர் | சுந்தரபாண்டியம் | வார்டு 14 | திரு வை பால்ராஜ் |
| விருதுநகர் | சேத்தூர் | வார்டு 13 | திருமதி வ பூமாரி |
| விருதுநகர் | சேத்தூர் | வார்டு 14 | திருமதி கா சரஸ்வதி |
| விருதுநகர் | வத்திராயிருப்பு | வார்டு 6 | திருமதி பெ தவமணி |
| விருதுநகர் | வத்திராயிருப்பு | வார்டு 8 | திருமதி சு ராஜேஸ்வரி |
| விருதுநகர் | வத்திராயிருப்பு | வார்டு 15 | திரு அ பாண்டி |
| விருதுநகர் | வத்திராயிருப்பு | வார்டு 16 | திரு கா மகாலிங்கம் |
| விருதுநகர் | வத்திராயிருப்பு | வார்டு 18 | திரு நா கோவிந்தன் |
| விருதுநகர் | வ.புதுப்பட்டி | வார்டு 14 | திருமதி பெ நல்லதாய் |

கலை இலக்கியப் பூங்கா

வி.உதயகுமார்



# புத்தக வாசிப்பு சமூக மாற்றத்திற்கானது

**சென்னை நந்தனம் ஒய்எம்சிஏ மைதானத்தில் 45வது புத்தகக் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கண்காட்சியை எந்த திசையில் இருந்து பார்த்தாலும் இளம் மாணவர்கள், இளம் பெண்கள் என ஒவ்வொரு அரங்கிலும் காண முடிந்தது.**

பொதுவாகவே பள்ளி, கல்லூரி படிப்புகள் முடிந்தவுடன் நமக்கும் புத்தகத்திற்குமான உறவு முடிந்து விட்டது என்று நினைக்கும் காலம் மறைந்து, இந்த இளம் தலைமுறையினரின் வாசிப்பு பழக்கும் அதிகரித்துள்ளதைத்தான் இது காட்டுகிறது.

புத்தக வாசிப்பு ஒவ்வொரு மனிதருக்கும் பல்வேறு விதமான அறிதல்களை, அனுபவங்களை கற்றுக் கொடுக்கிறது. வாசிப்பு ஆற்றல், படைப்பாற்றல், சிந்தனை ஆற்றல், நிதானம் என புதிய மனநிலையைக் கொடுக்கிறது.

வாசிப்பு பழக்கம் மூளையை சுறுசுறுப்போடு செயல்பட வைக்கும். செயல்திறனை அதிகரிக்கச் செய்யும். வயது மூப்பில் நரம்பியல் சார்ந்த கோளாறுகளிலிருந்தும் அல்மைசர் அறிவாற்றல் திறன் குறைபாடு சார்ந்த நோய்களிலிருந்தும் காப்பாற்றப்படுகிறோம் என்று மருத்துவ ஆய்வுகள் சொல்கிறது.

வாசிப்பு ஒரு மனிதனின் சிந்தனையை மாற்றும் அளவுக்கு மாபெரும் சக்தி வாய்ந்தது. எனவே புத்தகம் வெறும் விற்பனைக்கானது மட்டுமல்ல, அது ஒரு சமூக மாற்றத்திற்கானதும் கூட. அதேபோல் இலக்கியம் வெறும் ரசனை மட்டுமல்ல, அது வாழ்க்கைக்கு பயன்பட வேண்டும். புதிய சந்ததிகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

இதுபோன்ற புத்தகங்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாசிப்பு இருக்க வேண்டும். மனித வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளை நேர்த்தியாக எதிர்கொள்ள வேண்டும் என்றால் வாசிப்பு பழக்கத்தால்தான் முடியும்.

லண்டன் நூலகத்தில் பல வருடங்களாக பல நூல்களைப் படித்து ஆய்வு செய்த பிறகுதான் மாமேதை காரல் மார்க்சால் பல நூல்களைப் படைக்க முடிந்தது.

நூலகம் திறப்பதற்கு முன்பு முதல் ஆளாய் சென்று வாசிப்பை தொடர்ந்து நூலகம் நேரம் முடிந்தும் மெய் மறந்து வாசித்ததால்தான் டாக்டர் அம்பேத்கர் அவர்களால், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வரைவுக் குழு தலைவராக இருக்க முடிந்தது.

அடிமைகளின் சூரியன் என்று சொல்லப்பட்ட ஆபிரகான் லிங்கன் தனது வாசிப்பு பழக்கத்தால் சிகரத்தை அடைந்தார். தச்சுத் தொழிலாளியின் மகனான அவருக்கு ஜார்ஜ் வாசிங்டன் வரலாறு என்ற புத்தகத்தை வாசிக்கிறபோதே, அமெரிக்காவில் குடியரசுத் தலைவராக வர வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டிருக்கிறது. இதுவே அமெரிக்காவின் வரலாற்றை மாற்றி அமைந்தது.

மார்ட்டின் லுதர்கிங் என்னை உருவாக்கியது மகாத்மா காந்தியின் சத்திய சோதனை நூல்தான் என்றார்.

மகாத்மா காந்தி எனக்கு ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் முதலில் ஒரு நூலகம் அமைத்துக் கொள்வேன் என்றார்.

ஜவஹர்லால் நேரு என்னை தனிமைச் சிறையில் அடைத்தாலும் நான் ஒரு போதும் கவலைப்பட மாட்டேன். அங்கேயும் புத்தகங்களை வாசித்துக் கொண்டே மகிழ்ச்சியாக வாழ்ந்து விடுவேன் என்றார்.

அறிவியல் சம்மந்தமான புத்தகங்கள் மட்டுமல்லாமல் சமூகம், பண்பாடு, வாழ்வியல், மற்றும் அரசியல் புத்தகங்களையும் படித்து சிறந்த எழுத்தாளராக விளங்கியவர் டாக்டர் அப்துல் கலாம். அவரது பதவி காலம் முடிந்து குடியரசுத் தலைவர் மாளிகையிலிருந்து திரும்பியபோது ஏராளமான புத்தகங்ளோடு திரும்பினர்.

முன்னாள் முதல்வர் அண்ணாதுரை கல்லூரி படிப்பு முடிந்த பிறகும்கூட சென்னை கன்னிமாரா நூலகத்திலேயே நேரத்தை செலவிடுவாராம்.

மருத்துவமனையில் அண்ணா அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டபோது மருத்துவர்கள் உங்களுக்கு நாளை அறுவை சிகிச்சை என்றனர். அதற்கு அண்ணா, நாளை வேண்டாம் ஒருநாள் தள்ளிப் போடுங்கள் என்றாராம். மருத்துவர்கள் என்ன காரணம் என்று கேட்டபோது நான் ஒரு புத்தகத்தை படித்து வருகிறேன். அதை முழுவதும் படித்து முடித்துவிடுகிறேன். ஒருவேளை நான் இறந்து விட்டால் அந்தப் புத்தகத்தை முழுவதும் படித்து முடித்த மனநிறைவுடன் மரணத்தை எதிர் கொள்வேன் என்றாராம்.

வின்ஸ்ட்ன்ட் சர்ச்சில் குழந்தைகளுக்குத் தரும் சிறந்த பரிசு ஒன்று உண்டென்றால் அது புத்தகங்கள்தான் என்றாராம்.

இதுபோன்ற மேதைகளின் கூற்று எதைக் காட்டுகிறது? வாசிப்பு வாழ்வில் வெற்றிபெற அவசியம் என்பதைத்தான் காட்டுகிறது.

நாடு முழுவதும் மூடப்பழக்க வழங்கங்கள் மக்களிடம் இருப்பதால் தான், மதவெறி சக்திகளின் அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அனைத்து தரப்பினரையும் மதவாத மூடப்பழக்க வழங்கங்களிலிருந்து விடுபட வைக்கும் நல்ல ஆயுதம் என்று ஒன்று இருக்குமேயானால் அது புத்தக வாசிப்பு மட்டுமே.

சிந்தனையை விசாலப்படுத்தும் நம் அனைவரையும் சீர் தூக்கி சிந்தித்து செயல்பட வைக்கும். எனவே ஒவ்வொரு படைப்புகளும், புத்தகங்களும் விற்பனைக்கானது மட்டுமல்ல, அது அறிதலுக்கானது; சமூக மாற்றத்திற்கானது.

தொடர்புக்கு: **97919 22710**

கவிஞர் பா. மீனாட்சிசுந்தரம்




# மொழிகள் குற்றமற்றவை

கோவை: உலக தாய் மொழி தினத்தை முன்னிட்டு கோவை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில், உலக தாய் மொழி நாள், பன்மொழி கலை விழா நடத்தப் பட்டது.

இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய மரபுக் கவிஞரும், எழுத்தாளருமான பா.மீனாட்சிசுந்தரம் பேசும்போது, “ மொழிகள் குற்றமற்றவை அவை பயன்படுத்தப்படுவராலேயே அதன் தன்மைகள் மாறுபடுகின்றது. மொழி இயல்பாகத்தான் தோன்றி இருக்கவேண்டும். மொழியின் வேர் எங்கு இருக்கிறது என்று மனிதன் ஆராயந்தபோதுதான் கடவுள் வழங்கியதாக முடித்துக் கொண்டான்.

விவிலியம் ஆதாம் எது எதை எல்லாம் எவ்வாறு அழைத்தானோ அதுஅதுவே அதன் பெயர் என்று ஆகிப் போனது என்று கூறுகிறது. பாபிலோனிய காவியமான கில்கமீஸ்சில் மனிதன் சொர்க்கம் வானத்தில் இருப்பதாகக் கருதி வானை முட்டும் அளவிற்கு ஒரு ஒரு மாளிகை கட்ட நினைத்தான். இதை கடவுள் அறிந்து கொண்டு அந்த கனவை தகர்க்க ஒவ்வொரு மனிதனையும் ஒரு ஒரு மொழி பேசும்படி செய்தார். இதானால் ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியவில்லை. இதனால் சண்டைகள் ஏற்பட்டது. எனவே, மாளிகை கட்டும் முயற்சி கைவ்டப்பட்டது, மனிதர்கள் பிரிந்து சென்றார்கள் என்று கூறுகிறது.

எகிப்த நாட்டை சேர்ந்த ஒரு அரசன் யாரும் இல்லாத இடத்தில் இருக்கும் ஒரு மனிதன் கடவுளின் மொழியை பேசுவான் என்ற விவிலியத்தின் கூற்றை ஆராய,. புதிதாக பிறந்த குழந்தை ஒன்றை யாருமற்ற ஒருதீவில் வாழும் ஒரு ஆடுமேய்க்கும் ஊமையனிடத்தில் கொடுத்து வளர்க்க ஏற்பாடு செய்தான். இரண்டாண்டுகள் கழித்து சென்று பார்த்தபோது, அந்த குழந்தை, ஆடுகள் பேசும் மொழியை பேசிக்கொண்டு இருந்தது.

எனவே, மொழியை சமூகம்தான் உருவாக்குகிறது. ஐரோப்பியர்கள் ஆஸ்திரேலியாவில் காலடி வைப்பதற்கு முன்னர் அங்கு வாழ்ந்து வந்த பழங்குடிகள், எழுத்து வடிவம் இல்லாத ஒரு மொழியை பேசிக் கொண்டு இருந்தார்கள்.

அவர்கள் அழகாக பாடக் கூடியவர்கள் அவர்களது பாடல்கள் ஆஸ்த்ரேலியாவில் உள்ள ஆறுகளையும் மலைகளையும், காடுகளையும் பற்றியதாக இருக்கும். இது குறித்து ஒரு எழுத்தாளர் கூறுகிறார்.

ஆஸ்திரேலிய பழங்குடிகளின் பாடல்களை தொகுத்திருந்தால், ஆஸ்தி ரேலியாவின் ஒரு முழுமையான வரைபடம் கிடைத்திருக்கும் என்று. எனவே, மொழி சமூக கூறுகளை உள்ளடக்கியது என்றும் மீனாட்சி சுந்தரம் கூறினார்.

இந்த நிகழ்ச்சிகளுக்கு தமிழ்நாடு கலை இலைக்கியப் பெரு மன்றத்தின் மாவட்டத் தலைவர் வி.சுப்பரமணியன் தலைமை தாங்கினார். இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியின் மொழித் துறை தலைவர் இரா. ரமேஷ்குமார் முன்னிலை வகித்தார். முனைவர் அ.பொன்னுசாமி, பல்சமைய நல்லுறவு இயக்கத்தின் மாநிலத் தலைவர் ஹாஜி முகமது ரபி, இஸ்கப் பொதுசெயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பல்சமைய நல்லுறவு இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் எம்.எம்.ராமசாமி பரிசுகள் வழங்கினார். ப.பா.ரமணி நன்றி கூறினார். இதில் யூ.கே.சுப்ரமணியன், கே.சுப்ரமணியன், எஸ்.கோட்டிப்பன், எம்.வி.ராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிகளை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், இஸ்கப் மற்றும் இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தின.



## வலை வீச்சு

### வங்கி மோசடிகளும் குஜராத்திகளும்..

ரிஷி அகர்வால் - 22,842 கோடி
மெஹுல் சோக்சி - 7080 கோடி
நிரவ் மோடி - 6498 கோடி
சங்கவி பிரதர்ஸ் - 6710 கோடி
ஜதின் மேத்தா - 6580 கோடி
சண்டசாரா பிரதர்ஸ் - 5383 கோடி
பாரக் பிரதர்ஸ் - 2672 கோடி
லலித் மோடி - 1700 கோடி

இவர்கள் அனைவருமே குஜராத்திகள்..
இந்திய மக்களை கொள்ளையடித்து குஜராத் கொள்ளை கும்பலை வளர்த்து விடுவதே மோடியின் குஜராத் மாடல் வளர்ச்சி..









JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 26.02.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registar of Newspapers for India, Under Regd No: 1222/57

# நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி-மாநகராட்சி

C P I


மோ. ரேணுகா
42- சென்னை


கே. சாந்தி
41- கோவை


பி. மல்லிகா
43- கோவை


பிரபா. ரவீந்திரன்
48- கோவை


மேதூ. மோகன்
53- கோவை


க. சுரேஷ்குமார்
23- திருச்சி


ச. செல்வராஜ்
11- திருப்பூர்


ந. துளசிமணி
23- திருப்பூர்


எஸ். ரவிச்சந்திரன்
27- திருப்பூர்


அ. ராஜேந்திரன்
31- திருப்பூர்


ரா. பாலசுப்ரமணியம்
37- திருப்பூர்


சி. அருணாச்சலம்
54- திருப்பூர்


ஞா. தனலெட்சுமி
23- தூத்துக்குடி

### கட்சிகளின் வெற்றி நிலவரம் வார்டுகள் வாரியாக...

| கட்சிகள் | மாநகராட்சிகள் | நகராட்சிகள் | பேரூராட்சிகள் |
|---|---|---|---|
| | 1374 / 1370 | 3843 / 3842 | 7623 / 7603 |
| திமுக | 946 | 2,360 | 4,388 |
| அதிமுக | 164 | 638 | 1,206 |
| காங்கிரஸ் | 73 | 151 | 368 |
| சிபிஐ(எம்) | 24 | 41 | 101 |
| பாஜக | 22 | 56 | 230 |
| மதிமுக | 21 | 34 | 34 |
| விசிக | 16 | 26 | 51 |
| சிபிஐ | 13 | 19 | 26 |
| அமமுக | 3 | 33 | 66 |
| பாமக | 5 | 48 | 73 |
| முஸ்லீம் லீக் | 6 | 23 | 12 |
| தேமுதிக | 0 | 12 | 23 |
| நாம் தமிழர் | 0 | 0 | 6 |
| பகுஜன் சமாஸ் | 0 | 3 | 1 |
| மற்ற கட்சிகள் | | 17 | 34 |
| சுயேட்சைகள் | 73 | 381 | 961 |

### கட்சிகள் பெற்ற வாக்கு சதவீதம்

| கட்சிகள் | மாநகராட்சி | நகராட்சி | பேரூராட்சி |
|---|---|---|---|
| திமுக | 69 | 61.41 | 57.58 |
| அதிமுக | 11.94 | 16.60 | 15.82 |
| காங்கிரஸ் | 5.31 | 3.93 | 4.83 |
| சிபிஎம் | 1.75 | 1.07 | 1.33 |
| பாஜக | 1.60 | 1.46 | 3.02 |
| சிபிஐ | 1.00 | 0.50 | 0.34 |
| தேமுதிக | 0 | 0.31 | 0.30 |
| பிஎஸ்பி | 0 | 0.08 | 0.01 |
| தேசியவாத காங்கிரஸ் | 0 | 0 | 0.01 |
| இதர கட்சிகள் மற்றும் சுயேட்சைகள் | 9.10 | 14.64 | 16.52 |

### ஒரு வாக்கு கூட வாங்காத அ.தி.மு.க. வேட்பாளர்

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குப்பதிவு கடந்த 19ந்தேதி நடைபெற்றது.

இதில் புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி பேரூராட்சி ஏழாவது வார்டு அதிமுக வேட்பாளர் முகம்மது இப்ராம்சா ஒரு வாக்குகள் கூட பெறவில்லை. இந்த வார்டில் பதிவான 463 வாக்குகளில் ஒரு வாக்கு கூட அ.தி.மு.க. வேட்பாளருக்கு கிடைக்காதது ஆச்சரியமான செய்தியாக இருக்கிறது.

### சுயேட்சைகளின் ஆதிக்கம்

சென்னை மாநகராட்சியில் 92வது வார்டில் முதல் மூன்று இடங்களுக்கு வெற்றி பெற்ற மூவருமே சுயேட்சைகள் 1. திலகர் (சுயேட்சை) (3881), 2. மணிகண்டன் (சுயேட்சை) (2552), 3. முரளி (சுயேட்சை) (2163)

### அதிமுக மாவட்ட செயலாளர் படுதோல்வி

சென்னை மாநகராட்சியில் 89வது வார்டில் அதிமுக மாவட்டச் செயலாளர் அலெக்ஸண்டர் தோல்வியைச் சந்தித்தார். இவர் பெற்ற வாக்குகள் 2713. திமுக வேட்பாளர் எம்.சேகர் 5091

## மத்திய பொதுத்துறை நிறுவனமான நால்கோவைத்

# தனியார்மயமாக்கும் நடவடிக்கையைக் கைவிடுக!



மத்திய பொதுத்துறை நிறுவனமான நால்கோவைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கையைக் கைவிடுமாறு வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:

மத்திய பொதுத்துறை நிறுவனமான நால்கோவைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கையைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மத்திய அரசாங்கத்தின் சுரங்கத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள, நவரத்னா நிறுவனங்களில் ஒன்றான நேஷனல் அலுமினியம் கம்பெனியில் இருந்து 100 சதவிகித பங்குகளை விலக்கிக்கொள்வதன் மூலம் இந்நிறுவனத்தைத் தனியார்மயமாக்கும் தங்கள் அரசாங்கத்தின் அழிவுகரமான திட்டத்தை எங்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

1981 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் நாள் நிறுவப்பட்ட இந்நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளாக உயர்தர அலுமினா மற்றும் அலுமினியத்தை உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்து வருகிறது. தொடக்கக் காலம் முதல் லாபம் ஈட்டி வரும் இந்நிறுவனம் உற்பத்தி, உற்பத்தித் திறன், தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றில் தொடர்ந்து சிறந்து விளங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நால்கோ நிறுவனம் நாட்டிற்கு மிக அதிகமாக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. இந்நிறுவனம் மத்திய, மாநில அரசாங்கங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு கணிசமான ஈவுத்தொகையும் வழங்கி வருகிறது.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், தேசம் மற்றும் தொழிலாளர் நலன்களைக் கருத்தில் கொண்டு, இந்தத் தனியார்மய நடவடிக்கையை மறுபரிசீலனை செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தோழர் டி ராஜா தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

## முன் மாதிரி திருமணம்

வேலூர்: 20.02.2022 அன்று ஆசிரியர் சங்கத் தலைவர் எல்.மணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.லதா தம்பதியரின் இளைய மகள் செல்வி எல்.எம்.ஹாஷ்மி – செல்வன் எஸ்.வருண்குமார் திருமணம் தோழர் இரா. முத்தரசன் தலைமையில் நடைபெற்றது.

திருமணத்தை வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் நடத்தி வைத்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.சி.சாமிக்கண்ணு மற்றும் ஆசிரியர் அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

**தலைவர்களுக்கும் மற்றும் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சுமார் ஒரு லட்சம் மதிப்புள்ள நூல்கள் வழங்கப்பட்டன.**

வருகை தந்தோருக்கு தேங்காய், பழம், வெற்றிலை வழங்குவதற்கு மாறாக என்.சி.பி.எச். வெளியிட்டுள்ள நூல்களை தேர்வு செய்து ஒவ்வொருவருக்கும் தலா நான்கு நூல்கள் வழங்கப்பட்டது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது.

தலைவர்களுக்கு பளபளக்கும் எதற்கும் பயன்படாத சால்வைகளை அணிவிப்பதை தவிர்த்து நூல்கள் வழங்கப்பட்டன.

எல்.மணி – ஜி.லதா இவர்களின் முன்மாதிரியை அனைவரும் பின்பற்றினால் நல்லதுதானே ! இதுபோன்ற முன்மாதிரி திருமணங்கள் தொடரட்டும். மணமக்கள் சார்பில் தியாக சீலர் சி.எஸ்.சுப்பிரமணியம் கட்டிட நிதியாக ரூ.5000 வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.